சப்த விடங்கத் தலங்கள்

டாக்டர். K. சுப்ரமணியம்



குமரிப் பதிப்பகம்

சப்த விடங்கத் தலங்கள்

(திருவாரூர்; நாகப்பட்டினம்; திருநள்ளாறு;
வேதாரண்யம்; திருக்காறாயில்; திருவாய்மூர்;
மாதிரி அட்டவணை, வரைபடத்துடன்)

டாக்டர் **K. சுப்பிரமணியம்,** M.B.B.S., GCIM.,
DTCD., FRSH., FICA., FCCP.,
(இணை இயக்குனர், இருதய நோய் மருத்துவர்)
சென்னை - 44.

குமரிப் பதிப்பகம்,
8 நீலா தெற்கு வீதி,
(ராஜா-ராணி காம்ப்ளெக்ஸ்),
நாகப்பட்டினம் - 611 001.
Ph.: 04365-21472 Off.
04365-48443 Resi.

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**சப்த விடங்கத் தலங்கள்**
நூல் ஆசிரியர்	:	Dr. **K. சுப்பிரமணியம்**
நூல் உரிமை	:	குமரிப் பதிப்பகத்திற்கு
பதிப்பாளர்	:	வீ. ஜவஹர் (குருஜி)
அச்சிட்டுள்ள மொழி	:	தமிழ்
பதிப்பு விவரம்	:	முதற் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2001 ஆகஸ்ட்
தாளின் தன்மை	:	11.2 கி.கி.
நூலின் அளவு	:	க்ரவுன் சைஸ் (18X12½ செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	:	11 புள்ளி
நூல் கட்டுமானம்	:	சாதாரண அட்டை பைண்டு (தையல்)
மொத்த பக்கங்கள்	:	56 + 8 = 64 பக்கங்கள் (4 பாரம்)
அட்டை அமைப்பு	:	V. ஜவஹர்
டைப் செட்	:	அரசன் வீடியோஸ், நாகை. Ph.: 24549
அச்சிட்டோர்	:	முருகன் ஆஃப்செட், சென்னை - 4.

விலை : ரூ. 20.00

33/2

முன்னுரை

"சிதம்பரம் முதல் தஞ்சாவூர் வரை தரிசிக்க வேண்டிய தலங்கள்'' என்ற புத்தகத்தை எழுதிய பின்பு நண்பர் திரு. V. ஜவஹர் சப்த விடங்கத் தலங்களைப் பற்றி எழுதுமாறு வேண்டுகோள் விடுத்தார். முந்தைய நூலில் இத்தலங்கள் சுருக்கமாகத் தான் இடம் பெற்றிருந்தன. இருநூறு தலங்களுக்கு மேல் அந்நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதால் சில தலங்களைப் பற்றி விரிவாகச் சொல்லப்படவில்லை.

இந்நூலில் சப்த விடங்கத் தலங்களான திருவாரூர், நாகப்பட்டினம், திருநள்ளாறு, வேதாரண்யம், திருக்காறாயில், திருவாய்மூர் மற்றும் திருக்கோளிலி ஆகிய ஏழு தலங்கள் விரிவாகவும் அருகிலுள்ள வேறு முக்கிய தலங்களைப் பற்றிய சில குறிப்புகளும் விவரிக்கப்பட்டுள்ளன. திருவாரூரிலிருந்து புறப்பட்டுத் திருக்காறாயிலைத் தரிசித்து திருமறைக்காடு (வேதாரண்யம்) சென்றடையலாம்.

பின்பு திருவாய்மூர் திருக்கோளிலி வழியாக நாகப்பட்டினம் வந்து அங்கிருந்து திருநள்ளாற்றை அடையலாம். ஒவ்வொரு விடங்கத் தலத்தை தரிசிக்கும் போதும் அருகிலுள்ள சிறந்த தலங்களையும் தரிசிக்கலாம். திருவாரூர், வேதாரண்யம், நாகப்பட்டினம், திருநள்ளாறு (காரைக்கால்) முதலிய இடங்களில் தங்கும் வசதியும் போக்குவரத்து வசதிகளுமுள்ளன.

இந்நூல் எழுத எனக்குத் துணை புரிந்த டாக்டர். S. சுந்தரம், பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி, சென்னை அவர்களுக்கும் எனது துணைவியார் திருமதி. குணாசுப்ரமணியத்திற்கும் எனது நன்றி

குறுகிய காலத்தில் நல்ல முறையில் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்ட குமரிப் பதிப்பகத்திற்கும் இந்நூலை எழுதத் தூண்டிய நண்பர் திரு. V. ஜவஹருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

பல ஆன்மீக நூல்களைப் படித்து திருக்கோயில்களைத் தரிசித்து வரும் பக்த கோடிகளுக்கு என் சிரந்தாழ்ந்த வணக்கங்கள். எனது முதல் நூலான 'சிதம்பரம் முதல் தஞ்சாவூர் வரை தரிசிக்க வேண்டிய தலங்க'ளுக்கு அளித்த அமோக ஆதரவைப் போல் இந்நூலிற்கும் அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் அடுத்து வரும் நூல்களில் சந்திப்போம்.

நன்றி.


திருச்சிற்றம்பலம்.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கோவில்கள்

பொருளடக்கம்

மாதிரி அட்டவணை

முதல் நாள்	காலை	:	திருக்கண்ணமங்கை எண்கண் திருவாரூர்
	மாலை	:	திருக்காறாயில் திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் - தங்குதல்.
2-ஆம் நாள்	காலை	:	வேதாரண்யம் எட்டுகுடி திருக்கோளிலி திருவாய்மூர்
	மாலை	:	நாகப்பட்டினம் நாகூர் வேளாங்கண்ணி நாகப்பட்டினத்தில் தங்குதல்.
3-ஆம் நாள்	காலை	:	திருமருகல் திருச்செங்காட்டங்குடி திருக்கண்ணபுரம் திருப்புகலூர்
	மாலை	:	திருநள்ளாறு காரைக்கால்.



ஸப்த விடங்கஸ்தலங்கள்

1. திருவாரூர், 2. நாகப்பட்டினம், 3. திருநள்ளாறு, 4. வேதாரண்யம், 5. திருக்காறாயில், 6. திருக்கோளிலி (திருக்குவளை), 7. திருவாய்மூர், (8. திருத்துறைப்பூண்டி, 9. அதிராம்பட்டினம், 10. நன்னிலம், 11. பேரளம், 12. காரைக்கால், 13. நாகூர், 14. எட்டுக்குடி, 15. கோடிக்கரை).

சப்த விடங்கத் தலங்கள்

பாரத தேசத்தில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரை எண்ணற்ற வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. தமிழகத்தில் அனைத்து கிராமங்கள் முதல் சென்னை போன்ற பெரு நகரம் வரை ஏராளமான இடங்களில் சிறியதும், பெரியதுமான வரலாற்றுச் சிறப்புகளையுடைத்தான, கலை நுணுக்கங்கள் மிக்க பல கோயில்கள் உள்ளன. நாயன்மார்களால் பாடப் பெற்ற சிவத்தலங்கள், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற வைணவத் திருப்பதிகள், அருணகிரிநாதர், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் போன்ற அடியார்கள் பாடியவையும் மற்றும் பாடல் பெறாதவையுமாக சிறப்புமிக்க கோயில்கள் பல உள்ளன.

பொதுவாக இவற்றுள் பல தலங்களை (1) பஞ்ச பூதத் தலங்கள் (காஞ்சிபுரம், திருவாரூர் (பிருத்வி), திருவானைக்காவல் (அப்பு), திருவண்ணாமலை (தேயு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாயம்) (2) சிவபெருமான் வீரசாகசம் புரிந்த எட்டு தலங்கள் – அட்டவீரட்டத்தலங்கள் – திருவதிகை, திருப்பறியலூர், திருக்குறுக்கை, திருக்கடவூர், திருவழுவூர், திருக்கண்டியூர், திருக்கோவிலூர், திருவிற்குடி. (3) நவக்கிரகத்தலங்கள் – சூரியனார் கோயில், திங்களூர், வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, (திரு இரும்பூளை) கஞ்சனூர், திருநள்ளாறு, திருநாகேஸ்வரம், கீழப்பெரும்பள்ளம். (4) ஆறுபடைவீடுகள் – திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி (பழநி), சுவாமிமலை (திருஏரகம்), திருத்தணி, பழமுதிர்சோலை (5) பஞ்ச ஆரண்யத்தலங்கள் – திருக்கருகாவூர், திரு அவளிவணல்லூர், அரதைப் பெரும்பாழி, திரு இரும்பூளை, திருக்கொள்ளம் புதூர் (6) பஞ்ச கிருஷ்ணத்தலங்கள் – திருக்கண்ண மங்கை, திருக்கண்ணபுரம், திருக்கவித்தலம், திருக்கோவிலூர், திருக்கண்ணங்குடி, (7) பஞ்ச நரசிம்மத்தலங்கள் – குறையலூர், மங்கைமடம், திருநகரி – திருவாலி (8) பஞ்ச ரங்கத்தலங்கள் – ஸ்ரீரங்கப்பட்டினம், திருப்பேர் நகர்,

ஸ்ரீரங்கம், கும்பகோணம், இந்தளூர் மற்றும் பலதலங்களையும் வகைப்படுத்தியுள்ளனர். அதேபோன்று சப்த விடங்கத் தலங்களென 1. திருவாரூர் 2. நாகப்பட்டினம் 3. திருநள்ளாறு 4. திருமறைக்காடு (வேதாரண்யம்) 5. திருக்காறாயில் 6. திருவாய்மூர், 7. திருக்கோளிலி என்ற ஏழுதலங்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இதுபற்றிய பாடல் ஒன்று

சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் - பேரான
ஒத்த திருவாய்மூர் உவந்த திருக்கோளிலி
சத்த விடங்கத் தலங்கள்

என அத்தல வரிசையை உணர்த்துகிறது.

முசுகுந்தச் சக்ரவர்த்தி (முசுகுந்தன்)

கந்தர்வனொருவன் சாபம் காரணமாக ஒரு குரங்காக உருப்பெற்று ஒரு வில்வ மரத்தின் மேல் அமர்ந்திருந்தான். பார்வதி, பரமேஸ்வரர் அம்மரத்தின் அடியிலமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். குரங்கினசைவினால் வில்வ இலைகள் அவர்கள் மீது அர்ச்சித்தது போல் விழுந்தன. இருவரும் மேலே நோக்க, குரங்காக இருந்தவன் சுய உருவைப் பெற்று கந்தர்வனாக மாறி இறைவி, இறைவனை வணங்கினான். எங்களை வில்வத்தால் அர்ச்சித்ததால் அடுத்த பிறவியில் நீ ஒரு புகழ் பெற்ற மன்னனாகப் பிறப்பாய் என அவர்கள் ஆசி கூறினர். கந்தர்வனும் தான் பிறக்கும் போது குரங்கு முகத்துடனே பிறக்க அருளுமாறும், அவ்வாறு பிறந்தால் தான் தன்னுடைய முற்பிறவி நினைவிலிருக்குமெனவும் அதனால் சிவபூஜை தொடர்ந்து செய்ய முடியுமெனவும் வேண்டிக்கொண்டான். அவ்வாறே அடுத்த பிறவியில் சூரிய வம்சத்தில் பிறந்து அரசாண்டு வந்தான். முசு என்றால் குரங்கு. குரங்கு முகத்தைப் பெற்றிருந்ததால் முசுகுந்தன் எனப் பெயர் பெற்றான்.

இந்நிகழ்ச்சியைக் கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் விவரிப்பதைக் காணலாம்.

வில்வ இலையிட்டு பூசித்த முசுவுக்கு இறைவன் அருள்புரிதல்.

" விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைகள் இட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குலம் உதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தனன்.
முசுமுகத்துடன் உதித்தது.
தாரணி ஆள் அரிச்சந்திரன் என்போன்
ஓர் மரு மானென வே உதித் தன்றே;
மா முக மேமுசு மற்றுள எல்லாம்
காமரில் ஏர்தரு காட்சிய தாகிக்
கோமுறை சேர் முசுகுந்தன் எனாவோர்
நாம இயற்பெயர் நண்ணிய தன்றே (கந்தபுராணம் -.....

முசுகுந்தர் அரிச்சந்திரன் மருமகனெனக் கூறுகிறார்.

இவர் முருகவேளின் பக்தன் எனவும், இந்திரனால் தேவசேனை திருமணத்திற்குத் திருப்பரங்குன்றத்திற்கு வரவழைக்கப்பட்டதாகவும் கந்தபுராணம் கூறுகிறது.

எண்ணரிய பல காலம் இறையரசு செலுத்திய பின்
மண்ணுலகம் புரக்க அங்கி வன்மனுக்கு முடிசூட்டித்
துண்ணெனவே நோற்றிருந்து தொல்கயிலைதனை யடைந்தான்"

தன்மகன் அங்கி வன்மனுக்கு முடிசூட்டித் தான் பிறகு கயிலையை அடைந்ததாகவும் கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்திரனுக்கு உதவி

முன்பொருசமயம் இந்திரனுக்கும் வலன் என்ற அசுர அரசனொருவனுக்கும் போர் மூண்டது. அசுரனை வெல்வதற்குக் குருபகவானிடம் இந்திரன் யோசனை கேட்டார். அவர் முசுகுந்தச் சக்ரவர்த்தியின் துணை கொண்டு அசுரனை வெல்லலாம் எனக் கூறினார்.

சிறந்த சிவ பக்தரான முசுகுந்தரும் இந்திரன் வேண்டுகோளுக்கிணங்கி அசுரர்களை வென்று தேவர்களுக்கு உதவினார். மன்னர் சில நாட்கள் தேவலோகத்தில் தங்கினார். அவர் விடை பெறும் காலத்தில் இந்திரன் அவருக்குப் பரிசளிக்க விரும்பி என்ன பரிசு வேண்டும் எனக் கேட்டார். முசுகுந்தரும் நீங்கள் வழிபடும் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தந்தால் நான் முறைப்படி வழிபட்டு வருவேன் என்றார்.

புத்திரன் வேண்டி திருமால் தவம்

தேவர்களும், அசுரர்களும் பால் கடலைக் கடைந்த காலத்தில் தோன்றிய ஆலகால விஷத்தைச் சிவபெருமான் உண்டார். அதனால் நீல கண்டராகித் தேவர்களைக் காப்பாற்றினார். பின்பு தோன்றிய லக்ஷ்மி தேவியைத் திருமால் மணம் செய்து கொண்டார். திருமால் சிவ பெருமானை மட்டும் பூஜை செய்து ஒரு பிள்ளை பிறக்க வரம் பெற்றார். உமாதேவியை வணங்காமல் சிவபெருமானை மட்டும் வணங்கி வரம் பெற்றதால் தேவி "யாருடைய அருளால் மகன் பிறந்தானோ அவராலேயே அவன் இறப்பான்" எனச்சாபமளித்தார். மீண்டும் இருவரையும் வணங்கி வேண்டியதால் அப்பிள்ளை இறந்து போனாலும் மீளவும் உயிர் பெற்றெழுவான் எனப் பெருமான் கூறக் கேட்டு அந்த சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவருளை எண்ணிப் பிரிய மனமின்றித் தம் மார்பிலேயே இடமாக அமைத்து, அதிலேயே மனம் வைத்து எப்போதும் வழிபட்டுவந்தார். பின்பு திருமால் இந்த மூர்த்தியை இந்திரனிடம் அளித்தார்.

முசுகுந்தர் இந்த சோமாஸ்கந்த மூர்த்தியைக் கேட்ட உடன், இந்திரன் அதனைப் பிரிய மனமின்றி மறுதினம் தருவதாகக் கூறினான். மயன் என்ற தேவதச்சன் மூலம் தான் வழிபடும் மூர்த்தியைப் போன்று மேலும் ஆறு மூர்த்தங்களை உருவாக்கினான். இந்திரன் முசுகுந்தரை நோக்கி இந்த ஏழுமூர்த்தங்களுள் ஏதேனுமொன்றை எடுத்துச் செல்லுமாறு வேண்டினான். ஏழும் ஒரே மாதிரியாக இருந்தன. அரசனும் இறைவனை மனதில் வேண்ட அவரும் செங்கழுநீர் பூக்களைத் தரித்துள்ள மூர்த்தியையே தேர்ந்தெடுக்குமாறு அருள் புரிந்தார். அவ்வாறே முசுகுந்தரும் இந்திரன் தினசரி வழிபடும் மூர்த்தியையே தேர்ந்தெடுத்தார். வேறு வழியின்றி தான் வழிபடும் மூர்த்தியையும், இதர ஆறு மூர்த்திகளையும் இந்திரன் அரசரிடம் கொடுத்து வழி அனுப்பி வைத்தான்.

கந்தபுராணம்

திருமால் சிவபெருமானை மனதில் இருத்தி வழிபட்ட நிகழ்ச்சியைக் கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்கள் வருமாறு:-

"நிற்ப மற்றித்திரம் நேமியான் முன்னை நாள்
அன்புடன் வழிபடும் அமலையைக் குமரனை
தற்ப ரக் கடவுளைத் தனது மார்பிற் கொடே
பிற்பகல் பணியின் மேல் பாற்கடல் துஞ்சினான்."

உமையம்மையின் சாபம் நீங்கி மைந்தனைப் பெற்ற மகிழ்ச்சியில் திருமால் இறைவனையும், இறைவியையும், இளங்குமரனையும் மார்பில் வைத்துப் பல காலம் பாம்பின்மேல் பாற்கடலில் துஞ்சினார்.

"நீடவே துயிலுமால் நெட்டுயிர்ப் பசைவினால்
பீடுசேர் நாகணைப் பேருயிர்ப் பசைவினால்
மாடுசூழ் தெண்டிரைப் பாற்கடல் அசைவினால்
ஆடியே வைகினார் அலகிலா ஆடலார்'

திருமாலின் மூச்சு அசைவினாலும், பெருமைமிக்க நாகத்தின் மூச்சு அசைவினாலும், பாற்கடலின் அசைவினாலும், அளவிலா ஆடலுடைய தியாகேசன் திருமாலின் இதயகமலத்தில் ஆடி வீற்றிருக்கிறார்.

சப்த விடங்கத் தலங்கள்

இந்திரனிடமிருந்து பெற்று வந்த ஏழு மூர்த்திகளையும், ஏழு ஸ்தலங்களில் அவர் ஸ்தாபித்தார். மூல மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்றைய ஆறையும் திருநள்ளாறு, திருவாய்மூர், திருக்காறாயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநாகைக்கரோணம் என்று திருவாரூரைச் சுற்றியுள்ள ஆறுஸ்தலங்களிலும் ஸ்தாபித்து வழிபட்டு வந்தார். இவை ஏழும் "ஸப்த விடங்கத் தலங்கள்" என அழைக்கப்படுகின்றன. விடங்கம் என்றால் உளி. உளிபடாமல் மனத்தாலேயே தோன்றியவராதலால் விடங்கர் எனவும் அவர் எழுந்தருளியுள்ள ஸ்தலங்கள் விடங்கத்தலங்கள் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன.

காலயவனன் வதம்

ஸ்ரீ கிருஷ்ணரைக் கொல்வதற்காக ஜராசந்தன் பலமுறை முயற்சித்தும் முடியவில்லை, ஆகையால் கர்க்க முனிவரின் புதல்வர் காலயவனன் துணை கொண்டு ஜராசந்தன் மதுரா புரியை முற்றுகையிட்டான். யாதவர்களை அழிப்பதற்காகவே பிறந்தவன் காலயவனன். ஆகையால் அவனை தந்திரமாகக் கொல்வதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் திட்டமிட்டார்.

மதுராபுரியிலிருந்து கிருஷ்ணர் வெளிவந்தார். அவரைக் கண்ட காலயவனன் துரத்தலானான். அவரும் அவனை வெகுதூரம் இழுத்துச் சென்று ஒரு குகையினுள் நுழைந்து இருட்டினுள் மறைந்தார். குகை இருட்டில் அவரைத் தேடிக் கண்டுபிடிக்க அவனால் முடியவில்லை. அங்கு உறங்கிக் கொண்டிருந்த ஒருவரை கிருஷ்ணர் எனக் கருதி எழுப்பி "போரிடு" என்று கூவினான். அவர் எழுந்து காலயவனனைப் பார்த்ததும் அவன் எரிந்து சாம்பலானான். அவ்வாறு அவனை எரித்தது முசுகுந்தரே.

தேவாசுர யுத்தத்தில் இந்திரனுக்கு உதவியாகப் போரிட்டு அசுரர்களை அழித்து வெற்றிபெற உதவிய முசுகுந்தருக்கு நீண்டநாட்கள் போரிட்டதால் ஓய்வு தேவைப்பட்டது. இந்திரனிடம் "நான் நெடுநாட்கள் உறங்கவேண்டும். என் உறக்கத்தைக் கலைப்பவர்கள் என்பார்வை பட்டதும் எரிந்து சாம்பலாக வேண்டும்." என வரம் பெற்று அக்குகையில் உறங்கலானார். கிருஷ்ணரும் காலயவனனை அழிப்பதற்காக இத்தந்திரம் மேற்கொண்டு முசுகுந்தர் மூலம் அழித்தார். முசுகுந்தரும் கிருஷ்ணரை வணங்கி ஆசிபெற்று பதரிசாஸ்ரமம் சென்று தவமியற்றி முக்தியடைந்தார்.

ஆகையால் முசுகுந்தச் சக்ரவர்த்தி கிருஷ்ணாவதார காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. எனவே இந்த ஸப்த விடங்கத் தலங்களும் அவ்வளவு தொன்மையானவையாகும். முசுகுந்தச் சக்ரவர்த்தி தான் பெற்று வந்த ஏழு சோமாஸ்கந்த மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்த ஏழு ஸ்தலங்களைப் பற்றி இந்நூலில் விரிவாகக் காண்போம்.

முசுகுந்தச் சக்ரவர்த்தி வழிபட்ட தலங்களை நாமும் வழிபடச் செல்வோம். இதற்கு திருவாரூரில் ஆரம்பித்து, திருக்காறாயில் சென்று வழிபட்டு திருமறைக்காடு செல்லலாம். அங்கு வழிபட்டு திருக்குவளை, திருவாய்மூர் வழியாக நாகப்பட்டினம் வரலாம். அங்கிருந்து திருநள்ளாறு செல்லலாம்.

திருவாரூர், வேதாரண்யம், நாகப்பட்டினம், திருநள்ளாறு (காரைக்கால்) போன்ற இடங்களில் தங்கும் வசதிகளுண்டு. போக்குவரத்து வசதிகளும் உள்ளன. திருவாரூர், நாகப்பட்டினம் செல்ல இரயில் வசதிகளும் உள்ளன.

விடங்கத்தலம் - ஒன்று

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர் கோவில்

தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து தஞ்சாவூருக்குக் கிழக்கே நாகப்பட்டினத்திற்கு இடையில் திருவாரூர் தனிமாவட்டமாக விளங்கி வருகின்றது. இம்மாவட்டத்தின் தலைநகரமான திருவாரூரில் அமைந்துள்ளது அருள்மிகு தியாகராஜர் கோவில். இந்நகரை இரயில் மூலமும், பேருந்து மூலமும் அடையலாம். தங்குவதற்கு வசதிகள் உண்டு.

"சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமலராள் வழிபட்டது
வன்னி யாறு மதி பொதி செஞ் சடைச்
சென்னி யார் திரு வாரூர்"

என்று மிகவும் பழமையானநாடு, இலட்சுமி தேவி வழிபட்ட தலம் எனப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் இந்நகரச் சிறப்பை விவரிக்கின்றார். மேலும்

"வேத ஒசையும், வீணையின் ஒசையும்"......

"உள்ளம் ஆர், உருகாதவர் விடை
வள்ளலார் திருவாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஒசை திருப்பதிகங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"

என்று வேத கோஷங்கள், இசைமுழக்கம், தேவாரத் திருப்பதிகங்கள் இவற்றின் முழக்கம் போன்ற மங்கல ஒலிகளால் நமக்கு இந்நகரத்தை அறிமுகப்படுத்துகிறார்.

மனுநீதிச் சோழன் தன் மகன் ஒரு கன்றின் மேல் தற்செயலாகத் தேர் ஏற்றிக் கொன்று விட்டதற்காகத் தானே தன் மகன் மீது தேரை ஏற்றி, ஒரு பசுவிற்கும் நீதிவழங்கி அழியாப் புகழ் பெற்ற அரசைப் பெற்ற நகரம்.

மண், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற பஞ்சபூதத்தலங்களில் (பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) இது மண் – பிருத்வித் தலமாகும். காஞ்சிபுரமும் பிருத்விதலமே. விராட் புருஷனுடைய மூலாதாரத்தலமுமாகும். காமிகம் இத்தலத்திற்குரிய ஆகமமாகும்.

முத்தித்தலம்

திருவண்ணாமலையை நினைத்தலும், சிதம்பரத்தை தரிசித்தலும், காசியில் மரித்தலும் முக்தி தருவது போலத் திருவாரூரில் பிறந்தாலே முக்திபெறலாம். இதைத் திருஞானசம்பந்தர்

"சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆருரைப்
பத்தி மலர்தூவ முத்தியாகுமே"

என்று பாடியுள்ளார்.

நாயன்மார்கள்

பரவையார் அவதரித்தது, சுந்தரமூர்த்தி நாயனார் வேண்டுதலை ஏற்று இறைவன் பரவையாரிடம் தூது சென்றது, விருத்தாசலத்தில் மணிமுத்தாறிலிட்ட பொன்னைக் கமலாலயத்தில் இருந்து பெற்றுக் கொண்ட நிகழ்ச்சிகள் ஆகியவை இத்தலத்தில் தான் நிகழ்ந்தன.

"தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் தேவாசிரிய மண்டபத்திலமர்ந்து சிவனடியார்களைப் பற்றித் திருத்தொண்டத் தொகை பாடிய பெருமை பெற்ற தலம்.

விறன் மிண்ட நாயனார், நமிநந்தி அடிகள், திருநீலகண்டயாழ்ப்பாணர், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்கர், சோமாசிமாறர் முதலியோர் தொண்டு செய்து முக்திபெற்ற தலம்.

கந்தபுராணம்

முருகப்பெருமான் திருவாரூர் வந்து சிவபெருமானைத் தரிசித்துச் சென்றதை கந்த புராணம் கூறுகிறது.

"புற்றிடங்கொண்ட புத்தேள் புரந்
தரற் கருள் செய்திட்ட
நற்றலந் தன்னைச் சேர்ந்த நகரமுள்
ளனவுங் காணா உக்
கொற்ற வெங்கதிர்வேல் அண்ணல்
சொல்லுலை அழகிற் செக்கர்
பற்றிய இரும்பு போலும் பாலையங்
காணத்துற்றான்"

வெற்றியைத்தரும் ஒளிமிக்க வேலேந்திய முருகப் பெருமான், புற்றை இடமாகக் கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமான் இந்திரனுக்கருள் புரிந்த திருவாரூரைச் சேர்ந்த கோயில்கள் அனைத்தையும் கண்டு தரிசித்தார்.

கோவில் அமைப்பு

கோவில், குளம் இரண்டும் ஐந்து வேலி பரப்பளவுடையவை. மேற்கு கோபுரத்திற்கு எதிரில் கமலாலயம் என்ற பெரியகுளம் அமைந்துள்ளது. ஏழு கோபுரங்கள், மூன்று பிரகாரங்கள், சித்திர சபை, பக்தகாக்ஷி, ஊஞ்சல், எண்ணெய்க்காப்பு, ஆயிரங்கால், ராஜதானி எனப் பல மண்டபங்களுமுள்ளன.

திருமூலட்டானம், கமலாலயபுரம், வன்மீகநாதபுரம், ஆடகேசுரபுரம், மூலாதாரபுரம், சக்திபுரம், கந்தபுரம், முசுகுந்தபுரம், தேவாசிரிய புரம் எனப்பல பெயர்கள் இத்தலத்திற்கும், திருமூலட்டானம், பூங்கோயில் எனப் பல பெயர்களுள் கேவியிலுக்கும் உண்டு. சப்தவிடங்கத் தலங்களுள் முதலாவது.

இறைவன் : ஸ்ரீ வன்மீக நாதர், புற்றிடங்கொண்டார் திருமூலட்ட நாதர் என்று பல பெயர்கள் உண்டு. சுயம்பு மூர்த்தி; தேவர்கள் கறையான் வடிவுகொண்டு இயற்றிய புற்றை இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ளார். மூலவர் அருகில் சோமகுசாம்பிகை என்ற போக சக்தி அம்மன் அர்த்த மண்டபத்தில் நான்கு யாளிகள் தாங்கிய மேடைமேல் அமர்ந்து அருள் பாலிக்கிறாள். மூலத்தானத்திற்கு எதிரிலுள்ள நந்தியின் மேற்கூரையில் இருபத்தேழு நட்சத்திரங்களும், ராசிச் சக்கரமும் அமைந்துள்ளன.

ஸ்ரீ தியாகராஜர்

இத்தலத்தின் சிறப்பு மூர்த்தியும், முசுகுந்தச் சக்ரவர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்டவருமான இவர். இரத்தின சிம்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவருக்கு வீதி விடங்கர், தியாகப்பெருமான், கமலேசர், செம்பொன் தியாகர், அடிக்காயிரம் பொன் வழங்கியவர், ஆடரவக் கிண்கிணி காலழகர் போன்ற பல பெயர்களுள்ளன. இவருடைய அங்கப் பொருள்களாக மணித்தண்டு, தியாகக் கொடி, செங்கழுநீர்மாலை இவை விளங்குகின்றன. வீரகண்டய வாள்

அணிந்து, அஜபா நடனமாடிக்கொண்டு பஞ்சமுக வாத்திய முரசு, பாரி நாதஸ்வரம், சுத்த மத்தளம் முழங்க வேதம் என்ற குதிரையுடன் பதினெண் வகைப் பண்கள் பரவ சோழநாட்டில், திருவாரூரில் காவிரித் தென்கரையில் எழுந்தருளியுள்ளார்.

இவரின் திருமுகத்தை மட்டுமே தரிசிக்க முடியும். மற்ற அங்கங்கள் இரகசிய மானவையாதலால் மூடப்பட்டிருக்கும் இவரது இடது பாதத்தை மார்கழித் திருவாதிரை யன்றும், வலது பாதத்தை பங்குனி உத்திரத்தன்றும் தரிசிக்கலாம். அருகில் கொண்டி அம்மையும், மரகதலிங்கமும் உள்ளன. வீதிவிடங்கர் எனப்பெயர்; காலை, மாலை, இருவேளைகளிலும் நடக்கும் அபிஷேகத்தின் போது இவரைத் தரிசிக்கலாம்.

அஜபா நடனம்

திருமாலின் மார்பின் மீது வீற்றிருந்து மூச்சுக் காற்றை உள்ளிழுத்து வெளிவிடும் போது அசைந்தாடிக் கொண்டிருந்த நிலையில் இங்கும் அதே நடனத்தை மேற்கொள்கிறார். அஜபா – செபிக்கப்படாதது. இந்தக் காட்சி சன்னிதியில் வாயிலுக்கருகில் விளக்கங்களுடன் சித்திரமாக வரையப் பெற்றிருப்பதைக் காணலாம். கந்தபுராணப் பாடலும் விளக்கமும் முன்னுரையில் தரப்பட்டுள்ளன.

இவருக்கு மாலையில் நடக்கும் சாயரட்சா பூஜையை தேவேந்திரனே வந்து செய்வதாக ஐதீகம். ஆகையால் அப்பொழுது அர்ச்சகர் நீண்ட அங்கியுடன் தலைப்பாகை அணிந்து, பஞ்சமுக வாத்தியம் முழங்க பூஜை செய்வார். இவரே இங்கு சோமாஸ்கந்த மூர்த்தி. சோமாஸ்கந்த க்ஷேத்திரம் இங்கு பரிவார க்ஷேத்திரம்.

சோழ மன்னனது வேண்டுகோளுக்கிணங்கி அரச வடிவந்தாங்கி பல வருடங்கள் தியாகேசர் அரசாட்சி செய்ததாக வரலாறு. மனு நீதிச் சோழன் மகன் ஒரு பசுவின் கன்றின் மீது தேர் ஏற்றிக் கொன்றதற்காகத் தன் மகன் மீதே தேரை ஏற்றிப் பசுவிற்கு நீதி வழங்கியதை முன்னரே குறிப்பிட்டோம். இம்மன்னனுக்குக் காட்சி அளித்து மகனையும், பசுவின் கன்றையும் உயிர்ப்பித்தவரும் இவரே.

திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் பூந்தோட்டம் என்ற ஊருக்கருகிலுள்ள திருமாகாளம் எனும் தலத்தில் சோமாசிமாற நாயனார் நடத்திய யாகத்திற்கு அவிர்ப்பாகம் ஏற்க, சுந்தரமூர்த்தி நாயனார் வேண்டுகோளுக்கிணங்க வரும்போது நான்கு வேதங்களை நான்கு நாய்களாகவும், கணபதி, முருகன் இவர்களைச் சிறார்களாகவும் தானும், தேவியும் வெட்டியான், வெட்டிச்சியாகவும் வேடம் புனைந்து சென்று திருவிளையாடல் புரிந்த தெய்வமிவர்.

இவருடைய சந்நிதி ஸ்ரீ வன்மீக நாதர் சந்நிதிக்கருகில் உள்ளது. நுழைவாயிலில் உள்ள கதவில் முசுகுந்தன் உருவம் இருப்பதைக்காணலாம். இவரைத்தரிசித்து, வீதி விடங்கர் அபிஷேகம் கண்டு தேவியர் இருவரையும் இதர மூர்த்திகளையும் தரிசிக்கச் செல்வோம்.

இறைவியர் : இருவர்

1. ஸ்ரீ கமலாம்பிகை
2. ஸ்ரீ நீலோத்பலாம்பாள் (அல்லியங்கோதை)

ஸ்ரீ கமலாம்பிகை

தேவீம் ஸ்ரீத்யாகராஜஸ்ய தீக்ஷிதாம் தீனரக்ஷணே |
கமலாம்பா மிஹாலம்பே விமலாசய வாஸினீம் ||

இத்தலம் மிகச் சிறந்த சக்தி பீடம். பூமிதேவிக்கு முக மண்டலம் போல் விளங்குகிறது. கமலாம்பிகை யோக பீடத்திலமர்ந்து தவம் புரிவதால் கமலாலயம் எனப் பெயர் பெற்றது.

பண்டாசுரனது கொடுமை தாங்காத தேவர்கள் பராசக்தியைக் குறித்து ஒரு யாகமியற்றினர். அந்த யாக குண்டத்திலிருந்து ஸ்ரீலலிதா தேவி கமலாம்பிகை என்னும் திருநாமத்தோடு தோன்றினாள். தேவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை, அந்த அஸுரனை ஸம்ஹாரம் செய்து நீக்கினாள்.

அம்பிகை நான்கு திருக்கரங்களுடன் தாமரை பாசம், அக்கமாலை, அமைந்த நிலையில் யோகாசனத்தில் தரிசனம் தருகிறாள். கமலாம்பிகையின் மகுடம் கரண்ட மகுடமென்றும், ஆசனம் குட்டிகாசனமென்றும் தியான சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

இக்கோயிலின் தெற்குப் பிரகாரத்தில், அம்பாள் கோயிலின் மேற்கு மூலையில் அக்ஷரபீடம் இருக்கிறது. இதில் பீடமும் ஐம்பத்தோறு எழுத்துக்கள் எழுதப்பெற்ற திருவாசியும் உள்ளன. அன்பர்கள் அம்பிகையின் உருவத்தைத் தாங்கள் தரிசித்தபடி மானஸிகமாக எழுந்தருளச்செய்து தியானம் செய்வது வழக்கம்.

சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீ கமலாம்பிகையின் பேரில் இயற்றியருளிய "நவாவரண கீர்த்தனைகள்" மிகப் பிரசித்தமானவை.

கமலாம்பாள் த்யானம்.

த்ரீநேத்ராம் த்விபுஜாம் ஸ்யாமாம் கரண்ட மகுடான் விதாம்
யோகாசன ஸமாயுக்தாம் ஊருஹஸ்த ஸமன் விதாம்
நீலோத்பல தராம் தேவீ பாதுகா குட்டி காஸனாம்
ஏவம் த்யாயேத் பராசக்தீம் அர்சயித்வா விசேஷத:

இதன்பின் அருகிலுள்ள உச்சிஷ்ட கணபதியைத் தரிசிக்கலாம்.

அல்லியங்கோதை - நீலோத்பலாம்பாள்

தனிக்கோயில். தேவி தனது இடது திருக்கரத்தால் விஜயை என்னும் தோழியின் இடுப்பிலிருக்கும் முருகப் பெருமானின் தலையைத் தொட்டுக் கொண்டிருப்பது அரிய காட்சியாகும்.

அசலேஸ்வரம்

இக்கோயிலுக்குள்ளேயே பாடல் பெற்ற ஆரூர் அறநெறி – அசலேஸ்வரம் என்ற கோவிலும் மற்றும் பல கோயில்களும் பிரகாரம் இரு மருங்கிலும் இருப்பதைக் காணலாம்.

"கூட வல் லார்குறிப் பில்உமை யாளொடும்
பாட வல் லார்பயின்று அந்தியும் சந்தியும்
ஆட வல் லார்திரு வாரூர் அறநெறி
நாட வல் லார் வினை வீட வல் லாரே'

என்று அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற ஆரூர் அறநெறி என்ற இக்கோயில் தியாகராஜ சுவாமி கோயிலுக்குள்ளேயே உள்ளது. அசலேஸ்வரம் என்று பெயர்.

இறைவன் : அசலேஸ்வரர்;

இறைவி : வண்டார்குழலி அசலேஸ்வரர் என்றால் அசையாதவர் என்று பொருள். மலையப்பர் என்றும் கூறலாம். நமிநந்தி அடிகள் வழிபட்ட திருத்தலம், திருவாரூருக்கு அருகிலுள்ள திருமப்பற்று என்ற ஊரில் வாழ்ந்து வந்த அடிகள் தினசரி திருவாரூர் வந்து வன்மீக நாதரை வழங்குவது வழக்கம். ஒருநாள் மாலை நேரம் விளக்கேற்ற நினைத்தார். அருகிலுள்ள வீட்டில் விளக்கேற்ற நெய் கேட்டார். அது சமணர் ஒருவர் வீடாதலால் கிடைக்கவில்லை. அவரும் நீரைக் கொண்டு விளக்கேற்றும் என ஏளனமாகக் கூறிவிட்டார். குளத்து நீரைக் கொணர்ந்து விளக்கேற்றுமாறு இறைவன் அசரீரியாகக் கூறினார். அடிகளும் அனைத்து சந்நிதிகளிலும் கமலாலயத்தின் நீரைக் கொண்டு விளக்கேற்றினார்.

"நாதர் அருளால் திருவிளக்கு
நீரால் எரித்தார் நாடறிய"

என்ற பாடல் மூலம் இவ்வரலாறு அறியலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான இவர் பங்குனி உத்திரப் பெருவிழாவையும் சிறப்பாக நடத்திவந்தார். இக்கோவிலிக்கருகிலுள்ள ஒரு கல்லின் மேல் நின்று பார்த்தால் ஏழுகோபுரங்களையும் தரிசிக்கலாம்.

திருச்சுற்றுக் கோயில்கள்

வாதாபி கணபதி, உச்சிஷ்டகணபதி, சுப்பிரமணியர், கலைமகள், ஒட்டுத்தியாகர், ஏகாதசலிங்கங்கள், ஆடகேஸ்வரம், ஆனந்தேஸ்வரம், சித்தீஸ்வரம், வல்லபை கணபதி, தக்ஷிணா மூர்த்தி, பிரமநந்தி, அண்ணாமலை நாதர், ரௌத்ர துர்க்கை, சப்தமாதர்கள், கைலாசத்தியாகர், பாண்டிய நாதர், விசுவகர்மேஸ்வரர், வியீஷணேஸ்வரர், வருணேஸ்வரர், சபாபதீஸ்வரர், அகஸ்தீஸ்வரர், ஹயக்கிரீவேஸ்வரர், நெல்லிக்காய் விநாயகர் பூஜித்த லிங்கம், சனீஸ்வரர், தாரை, பிரஹஸ்பதி முதலியோர் பூஜித்தலிங்கங்கள், நான்கு வேதங்கள், யஜுர் வேதீஸ்வரர், ரிக் வேதீஸ்வரர், சாமவேதீஸ்வரர், அதர்வண வேதீஸ்வரர், தேவேந்திரன், துளசிராஜா உடையார் தேவர், அத்ரி மகரிஷி, பிருகு மகரிஷி, சண்டிகேஸ்வரர் பூஜித்தலிங்கங்கள், புலஸ்திய பிரம்மேஸ்வரர், புலஸ்திய ரட்சேஸ்வரர், மெய்கண்டார், அருள் நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், சந்தனாசாரியார் என்று பல கோயில்களும் மூர்த்தங்களும் ஏராளமாக உள்ளன.

எம சண்டேசர், ஆதி சண்டேசர் என இரு சண்டேஸ்வரர்கள் உள்ளனர்.

இரணவிமோசனேஸ்வரரைத் தொழுதால் ரணங்கள் ஆறுமென்றும், ஜ்வரஹரேஸ்வரரைத் தொழுதால் ஜுரம் போகுமென்றும் கூறுவர்.

மண்டபங்கள்

கோயில் பெரியதாக இருந்தால் விழாக்காண மண்டபம் வேண்டாமா? எனவே அதற்கான அநேக மண்டபங்கள் உள்ளன. அவற்றுள் பக்தகாட்சி மண்டபம் – பங்குனி உத்தர விழாவிற்குப்பின் தியாகராஜர் எழுந்தருளுமிடம்

ஊஞ்சல் மண்டபம் – ஊஞ்சல் உற்சவம் நடக்குமிடம்.

இவை தவிர துலாபார மண்டபம் –

சித்திரசபா மண்டபம் ஆகியவையும் உண்டு.

ஆயிரக்கால் மண்டபம் – தேவாசிரியம் எனப்படும். தரிசனத்திற்கு வரும் தேவர்கள் முன்பு தங்கியிருந்ததற்கு இடமாக இருந்த மண்டபம். இங்கு தியாகரா்ஜர் ஆழித்தேர் விழா முடிந்து அரசாட்சி செய்வதால் ராஜதானி மண்டபம் என்றும் பெயர் உண்டு.

எண்ணெய்க்காப்பு மண்டபம்; இது ராஜ நாராயண சோழன் கட்டியதால் ராஜ நாராயண மண்டபம் எனப்பெயர் பெற்றது. பங்குனி உத்தர விழா முடிந்து இங்கு எங்ணெய்க்காப்பு நடைபெறுவதால் இப்பெயர் பெற்றது.

இங்கு தலமரம் பாதிரியாகும்

கமலாலயம்

இது ஆரூரின் சிறப்புமிக்க குளம். ஐந்து வேலி பரப்பளவுடன் இருபத்து நான்கு கட்டங்களைக் கொண்டது. (ஒரு வேலி என்பது ஐந்து காணி அதாவது 6.66 ஏக்கர்) நாற்புறமும் வீதிகள். மேற்கு கோபுர வாயிலெதிரில் குளக்கரையில் மாற்றுரைத்த விநாயகர் கோவிலுள்ளது. விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) என்னும் தலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவன் ஸ்ரீபழமலை நாதரிடம் பொன்வேண்டினார். இறைவனும் பன்னிரண்டாயிரம் பொற்காசுகள் தந்தருளினார். அவற்றைத் திருவாரூரில் பெற அருளுமாறு சுந்தரர் வேண்ட இறைவனும் அங்குள்ள மணிமுத்தாறு நதியிலிட்டு கமலாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அருளினார். பின்பு

பலதலங்களைத் தரிசித்து ஆரூருக்கு வந்த சுந்தரர் பரவையாருடன் சென்று கமலாலயத்தில் பொன்னைத் தேடலானார்.

"பொன் செய்த மேனியீர் புலித்
தோலை யரைக் கசைத்தீர்
முன் செய்த மூவெயிலும்
எரித்தீர் முது குன்றமர்ந்தீர்
மின் செய்த நுண்ணிடை
பரவை யிவள் தன் முகப்பே
என் செய்தவா றடி கேள்
அடியேன் இட்டளங் கெடவே"

என்று தொடங்கி திருவாரூரில் கமலாலயத் திருக்குளத்தில் நின்று கொண்டு திருமுதுகுன்ற பழமலை நாதரை ஒன்பது பதிகங்கள் பாடி வேண்டுகிறார். "கூத்தாதந்தருளாய்" என்ற ஒன்பதாவது பாடல் முடிந்ததும் சிவ பெருமானின் கருணையினால் பொற்காசுகள் கிடைத்தன. மேலும் ஒரு பாடல் பாடி வணங்கினார். அப்பொற்காசுகள் விருத்தாசலத்தில் இட்டவைதானா என்று உரைத்துப்பார்க்க உதவியாக இருந்த கணபதிதான் இந்த மாற்றுரைத்த விநாயகர்.

இக்குளத்தின் மையப் பகுதியில் நடுவ நாயனார் கோவிலும், மேற்கரையில் யக்ஞேஸ்வரர் கோவிலுமுள்ளன.

திருத்தேர்

"திருவாரூர் தேரழகு" என்ற பெயருக்கேற்ப இது 255 டன் எடையுள்ளது. இந்தியாவிலேயே அழகுமிக்க தேராகும். முன்பிருந்த தேர் 1924ல் தீக்கிரையாகி விட்டதால், தற்போது இருக்கும் தேர் 1930ல் உருவாக்கப்பட்டது.

இத்தேரில் தக்ஷிணாமூர்த்தி தவத்தை மன்மதன் கலைத்ததும், மூன்றாவது கண்ணைத் திறந்து அவனை அவர் எரித்ததுமான புராணக் கதைகள் முதற் கொண்டு மனு நீதிச்சோழன் தன் மகன் கன்றின்மீது தேரோட்டிக் கொன்று விட்டதால், மகன்மீது தான் தேரேற்றும் காட்சி, இறைவன் அவர்களுக்குக் காட்சியளித்தல் முதலிய முன்னூறு சிற்பங்கள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆழித்தேர் எனப் பெயருடைய இத்தேர் மிகச் சிறந்த கலைப் பொக்கிஷம் என்பதில் ஐயமில்லை. 'இத்தேர் உருளைகள் நவீனமாக்கப்பட்டு ஆண்டுதோறும்

பக்தர்களால் இழுக்கப்பட்டு சிறப்பான முறையில் தேர்த்திருவிழா நடைபெற்று வருகிறது.

சோலையில் வண்டினங்கள் சுரும்போடு
இசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகை போய்
முகில் தோயும் ஆரூரில்
பாலொடு நெய் தயிரும் பயின்றாடும்
பரமேட்டி பாதம்
காலையும் மாலையும் போய்ப்
பணிதல் கருமமே.

திருவாரூரில் பால், நெய், தயிர் ஆகியவற்றால் பூசைகள் பயின்றாடும் பரமனின் திருவடிகளைக் காலை, மாலை ஆகிய இருகாலங்களிலும் சென்று வணங்குதல் கடமையாகும் என்று ஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

வேம்பினைப் பேசி விடக் கிணை
ஓம்பி வினை பெருக்கி
தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றம்
துணையென்று இருத்தீர் தொண்டர்
ஆம்பலம் பூம் பொய்கை ஆரூர்
அமர்ந்தான் அடி நிழற்கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித்
தொண்டுபட்டு உய்ம் மின்களே.

ஈசனின் திருவடிக்கீழ் இருந்து திருவெண்ணீறு பூசி, மனமசையாது ஒருமித்து நின்று தொண்டு புரிந்து ஏத்தி உய்வீராக என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார்.

பரவையுண் மண்டலி : சுந்தரமூர்த்தி நாயனார் பாடல் பெற்றது. கீழவீதியிலுள்ளது. இங்குள்ள இறைவன் தூவாய்நாதர் எனப்படுவர்

திருநீலகண்ட நாயனார் கோவிலும், பரவை நாச்சியார் கோவிலும் நகரிலேயே உள்ளன.

இப்பெருமக்கள் பாடியது போல் நாமும் ஆரூரனை வணங்கி அருகிலுள்ள தலங்களைத் தரிசித்து அடுத்த விடங்கத் தலம் நோக்கி விரைவோம்.

திருவாரூரிலும் அருகிலுமுள்ள தலங்கள்

திருக்கண்ணமங்கை

ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் கோவில்

திருவாரூருக்கு வடமேற்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது நூற்று எட்டு வைணவத்திருப்பதிகளில் சோழ நாட்டில் உள்ள திருத்தலங்களில் ஒன்று; கிருஷ்ண மங்கள க்ஷேத்ரம்; பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது. திருமகள் இங்கு தவமியற்றிக் திருமாலைத் திருமணம் செய்து கொண்டதாக வரலாறு.

மூலவர் : ஸ்ரீ பெரும்புறக்கடல் – நின்றத் திருக்கோலம்
ஸ்ரீ பெரிய பெருமாள்.
உற்சவர் : ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள்.

கருவறையைச் சுற்றிலும், கோஷ்டத்தில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர், வாமனர், பரசுராமர், ஹிரண்ய ஸம்ஹாரர், பலராமர், இராமர், பத்தராவிப் பெருமாள், வேணு கோபாலன், பிரம்மா, பரமபதநாதன், கஜேந்திரவரதன், ஸரஸ்வதி, பூவராகன் ஆகியோருடைய மூர்த்தங்கள் உள்ளன. அபூர்வமான வேலைப்பாடுகள் அமைந்தவை, வேறு எந்த கோவிலிலும் இத்தகைய அமைப்பு காணப்படுவதாக தெரியவில்லை.

தாயார் : மூலவர் : ஸ்ரீ கண்ணமங்கை நாயகி
உற்சவர் : அபிஷேகவல்லி.

தனிக்கோயில், கோயிலின் மண்டபத்தில் ஒரு மாடப்பிறையில் தேன்கூடு ஒன்று உள்ளது. தாயாரின் திருமணத்திற்கு வந்த தேவர்கள் தேனீயாக இங்கேயே தங்கி விட்டதாக ஐதீகம்.

கோயிலின் எதிரில் பெரியதிருக்குளம். கரையில் ஆஞ்சநேயர் சுவாமியை நோக்கிய வண்ணம் அமைந்துள்ளார்.

எண்கண் ஸ்ரீ முருகன் கோவில்

இத்திருக்கோவில் திருவாரூருக்கருகில் உள்ளது. அழகான கோவில். எதிரில் திருக்குளம். மயில்மீது ஆறு திருமுகங்களுடன் வள்ளி தெய்வயானையுடன் அமர்ந்த நிலையில் உள்ள அழகான மூர்த்தி. இச்சிற்பி முதலில் சோழ அரசனுக்கு ஒருசிலையை வடித்தார். அவர் வேறுயாருக்கும் இதுபோல் அழகான சிலையை வடிக்கக் கூடாது என்று அவரது கட்டைவிரலை அரசன் வெட்டிவிட்டான். இருப்பினும் ஒருசிற்பி ஒருசிலையை எட்டுக்குடியில் வடித்தார். அதை அறிந்த மன்னன் சிற்பியின் கண்களைக் குருடாக்கி விட்டான். கண்கள் இல்லாத போதும் மூன்றாவதாக இச்சிலையை எண்கண்ணில் வடித்தார். இறைவனருளால் கண் பார்வையை மீளப் பெற்றார். இம்முருகனை வழிபட்டால் இழந்த பார்வையை மீளப்பெறலாம் எனக் கூறப்படுகிறது.

இவ்விரண்டு தலங்களையும், திருவாரூரையும் தரிசித்து அடுத்த விடங்கத் தலத்துக்குச் செல்லலாம்.

திருக்கோவில்கள் - ஏழுவகை

1. ஆலக்கோவில்
2. ஞாழற் கோவில்
3. கொகுடிக் கோவில்
4. இளங் கோவில்
5. மணிக் கோவில்
6. கரக கோவில்
7. பெருங் கோவில்

விடங்கத்தலம் - இரண்டு

நாகப்பட்டினம்
ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் கோவில்

திரு நாகை என்று பாடல்பெற்ற இத்திருத்தலம் நாகப்பட்டினம் நகரின் மையத்தில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. தஞ்சாவூரிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனிமாவட்டமாக உள்ளது. சென்னை தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், மயிலாடுதுறை, கும்பகோணம் மற்றும் பல இடங்களிலிருந்தும் இரயில் மூலமும், பேருந்து வழியாகவும் அடையலாம்.

"பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட்டினத் திருநகரம்"

என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். புராணத்திலும், சரித்திரத்திலும், கடல் வாணிபத்திலும் புகழ் பெற்ற நகரம். சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராகவும் இருந்துள்ளது. சப்த விடங்கத் தலங்களில் ஒன்று.

அதிபத்த நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அதிபத்த நாயனாரின் அவதாரத்தலம். பரதவர் குலத்தில் பிறந்த இவர் தினசரி தாம் பிடிக்கும் மீன்களில் சிறந்த ஒன்றை சிவபெருமானுக்காகக் கடலிலேயே விட்டுவிடுவார். பல தினங்களில் ஒரே மீனே கிடைக்க அதையும் இறைவனுக்கு அர்ப்பணித்து விடுவார். உணவின்றி இருந்த நிலையிலும் இத்தொண்டாற்றிய பக்தனுக்கு அருள் செய்ய எண்ணி இறைவன் ஒரு நாள் விலையுயர்ந்த நவரத்தின மயமான மிகச் சிறந்த ஒரு மீனை அதிபத்த நாயனாரின் வலையில் சேர்ப்பித்தார். மகிழ்ச்சியுற்ற நாயனார் அம்மீனையும் இறைவருக்கே என்று கடலில் மீளவும் அர்ப்பணித்தார். அவரை மெச்சி இறைவர் அவருக்குக் காட்சியளித்து முக்தியளித்தார்.

காயாரோகணர்

புண்டரீக முனிவர் காஞ்சிபுரம், கும்பகோணம், நாகப்பட்டினம் என்ற மூன்றிடங்களில் காரோணப்பிரதிட்டை செய்தார். நாகப்பட்டினத்தில் காரோண பீடம் இயற்றி அதில் காயத்துடன் மறைந்தார். முனிவரை உடம்போடு (காயத்தோடு) அணைத்துக்கொண்டு (ஆரோகணம்) காட்சியளித்ததால் காயாரோகணர் என்ற பெயருடன் அம்முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம். புண்டரீக முனிவரின் உருவத்தை ஒரு தூணில் காணலாம். அக்காரணம் கொண்டே தலமும் நாகைக் காரோணம் எனப்படும் "கானுங்கடல் நாகைக் காரோணத்தானே" என்று சம்பந்தரும், "கறைமலி சூழ் நாகைக் காரோணங் கோவில் கண்ட இறைவனை நாளும் ஏத்த இடும்பை போய் இன்பமாமே" என்று சுந்தரரும் பாடியுள்ளனர். மொத்தம் மூன்று காரோணங்களுள்ளன. குடந்தைக்காரோணம், கச்சிக்காரோணம், நாகைக்காரோணம் என இவை குடந்தையிலும், காஞ்சியிலும் நாகையிலுமுள்ளன.

நாகர்களுக்கு அரசனான நாகராஜன் ஈசரை வழிபட்டது நாகப்பட்டினம் என்ற பெயருக்கொரு காரணம். தினசரி காலையில் கும்பகோணத்திலுள்ள ஸ்ரீநாகேஸ்வரரரையும், உச்சிப்பொழுதில் அருகிலுள்ள திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாகநாதரையும், மாலையில் குடவாசலிற்கருகிலுள்ள திருப்பாம்புரம் ஸ்ரீ பாம்புரேஸ்வரரையும் அர்த்தசாமத்தில் நாகப்பட்டினம் ஸ்ரீ காயாரோகணேஸ்வரர், நாகூர் ஸ்ரீ நாகநாதரையும் நாகராஜன் வழிபடுவதாக வரலாறு. ஆகையால் சிவராத்திரி தினத்தன்று சிறப்பாகவும், மற்றைய தினங்களில் ஒரே தினத்தில் நான்கு தலங்களையும் வழிபடுவது சிறப்பாகும்.

அகத்தியருக்குத் திருமணக் காட்சியருளிய தலங்களில் இதுவும் ஒன்று.

மகாசங்கார காலத்தில் சிவபெருமான் உயிர்களைத் தம்முள் ஐக்கியமாக்கிக் கொண்டதலம்.

திருக்கோயில் கடலை நோக்கி அமைந்துள்ளது.

இறைவன்: ஸ்ரீ காயாரோகணேஸ்வரர்; புண்டரீக முனிவரால் ஸ்தாபிக்கப் பெற்றவர். மூலவருக்குப் பின்னால் கருவறையின் மேற்குச் சுவரில் இறைவனின் திருமணக் கோலத்தையும், சப்த ரிஷிகளுக்கும் சோமாஸ்கந்தராகக் காட்சியளித்ததையும் சிற்ப வடிவில் காணலாம்.

திருமால், பிரம்மா, சப்த ரிஷிகள் ஆகியவர் வழிபட்டதாக வரலாறு. ஆகையால் அவர்களை முறையே சிவலிங்கத்தின் நடுவிலும், அடியிலும், புலத்திலும் அமர்த்தியதாகக் கூறுவர்.

இறைவி: அருள்மிகு நீலாயதாக்ஷி; கருந்தடங்கண்ணி; இத்தலம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்று. பக்தர்களால் நீலாயதாக்ஷிக்கோவில் என்றே அழைக்கப்படுகிறது. தனிக் கோவிலில் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார் அம்பிகை. "அம்ப நீலாயதாக்ஷி" என்று முத்துசுவாமி தீட்சிதரும், மற்றும் சியாமாசாஸ்திரிகளும் பாடியுள்ளனர். அம்பிகை சந்நிதி ராஜதானி மண்டபத்தின் வலது புறத்திலுள்ளது.

சிறப்புமூர்த்தி : ஸ்ரீ தியாகராஜர்

சுந்தர விடங்கர், அழகிய விடங்கர் எனப்பெயர்.

இவர் ஆடியநடனம் பாரா வார தரங்க நடனம். (பாராவாரம் – கடல்; தரங்கம் – அலை) கடல் அலை போல் எழுந்து, சுருண்டு, மடங்கி விழுந்தாடும் நடனம். கடற்கரையோரத்தில் அமைந்ததால் இந்த நடனத்தைத் தேர்ந்தெடுத்தார்போலும்! தியாகராஜருக்கு எதிரில் சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாருடன் உள்ளார்.

இதரதெய்வங்கள்

நாகாபரணப் பிள்ளையார் நுழைவாயிலின் அருகில் தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளார். ஐந்து தலைநாகம் ஒன்று பிள்ளையாருக்குக் குடைபிடிப்பது போன்று அமைந்துள்ளது. இங்குள்ள நந்தி சுதையால் ஆனது. விநாயகரின் பின்புறமுள்ளது. பஞ்சமுக ஹேரம்ப விநாயகர் – இங்கு உற்சவர். மாவடிப்பிள்ளையார், அதிகார நந்தி, சூரியன், சந்திரன், பைரவர், புண்டரீக மகரிஷி, ஆத்மலிங்கம், அருணாசலேஸ்வரர், வள்ளி, தேவயானை சமேத சுப்ரமணியர், நடராஜர், சிவகாமி, சம்பந்தர், அப்பர், சுந்தரர், சாளீசுக மன்னர் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. நவக்கிரகங்கள் மேற்குத் திசையை நோக்கி மூன்று வரிசையில் நின்ற வண்ண முள்ளனர்.

தலமரம் : மா

தீர்த்தம் : புண்டரீக தீர்த்தம், தேவதீர்த்தம்.

முக்தி மண்டபம் : காசி, திருவையாறு, நாகப்பட்டினம் இந்த மூன்று இடங்களில்தான் இம்மண்டபங்கள் உள்ளனவெனக் கூறுவர்.

இராஜதானி மண்டபமும், சங்க மண்டபமும் இங்குள்ள இதர மண்டபங்கள்.

பாடியோர் : திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள் மற்றும் பலர்.

நிருத்தனை நிமலன்றன்னை நீணிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேதவித்தை விளைபொருள் மூலமான
கருத்தனைக் கடல்சூழ் நாகைக் காரோணம் கோயில் கொண்ட
ஒருத்தனை உணர்தலால் நலம் உய்ந்தவர் நெஞ்சினீரே

— அப்பர்.

ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச்
சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியாது எழும் தொண்டர்
காணும் கடல் நாகைக் காரோணத்தானே.

— திருஞானசம்பந்தர்

(சேண் நின்றவர் – தேவர்)

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன்
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல் விருத்தி தாரீரே ஆகில்
திருமேனி வருந்தவே வலைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

— சுந்தரமூர்த்தி நாயனார்.

விழாக்கள்

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பெருவிழா உண்டு. ஆவணியில் அதிபத்த நாயனாருக்கு இறைவன் அருள் செய்த விழா நடக்கும்.

இத்தலத்தையும் இந்நகரிலுள்ள இதர ஆலயங்களையும் அருகிலுள்ள தலங்களையும் தரிசித்த பின்பு அடுத்த விடங்கத் தலம் செல்லலாம்.

நாகையிலும் அதற்கருகிலுமுள்ள கோவில்கள்

ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் - நாகப்பட்டினம்

நாகை நகரிலேயே ஸ்ரீ காயரோகணேஸ்வரர் ஆலயத்தினருகிலுள்ளது. இது 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று.

மூலவர் : ஸ்ரீ நீலமேகப் பெருமாள்; கதையுடன் நின்ற திருக்கோலம்.
ஸ்ரீ கோவிந்தராஜன் – வீற்றிருந்த திருக்கோலம்.
ஸ்ரீ அரங்கநாதன் – சயனத் திருக்கோலம்.

தாயார் : ஸ்ரீ சௌந்தரவல்லி

உற்சவர் : ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள்

தாயார் : ஸ்ரீ கஜவல்லி.

இங்குள்ள அரங்கநாதர் சந்நிதியில் அமைந்துள்ள அஷ்ட புஜ நரசிம்ம மூர்த்தியின் அமைப்பு சிறப்பானது. ஒரு கை பிரஹலாதனின் தலையைத் தொட்ட வண்ணமும் இரண்டு கைகள் இரணியனை வதம் செய்து கொண்டும் ஒரு கை அபய ஹஸ்தத்துடனும் உள்ள அருமையான மூர்த்தி

திருமால் துருவனுக்குக் காட்சி தந்த தலம். திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட தலம்.

நகரிலுள்ள மற்ற கோயில்கள்

கோட்டை மாரியம்மன் கோயில் – பழைய பேருந்து நிலையமருகில் உள்ளது. நவநீத கிருஷ்ணன் கோயில், தேசிகர் கோயில், அனுமார் கோயில் முதலியன பெருமாள் கோயிலருகிலேயே உள்ளன.

நாகூர் ஸ்ரீ நாகநாத சுவாமி கோயில்

நாகையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் காரைக்கால் செல்லும் பாதையில் உள்ளது. இது நாகராஜன் வழிபட்ட கோவில்.

நாகூர் ஆண்டவர் தர்ஹா

பல மதத்தினரும் வழிபடும் நாகூர் ஆண்டவர் தர்ஹா உள்ளது. முகம்மதியருக்கு இது பிரார்த்தனைத் தலம். சந்தனக்கூடு திருவிழா மிகவும் பிரசித்தம்.

திருமருகல் ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் கோவில்

நாகைக்கு வடமேற்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ளது. அப்பர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். விடம் தீண்டி இறந்து விட்ட வணிகனை விடந்தீர்த்த பதிகங்கள் பாடி சம்பந்தர் எழுப்பிய தலம்.

திருச்செங்காட்டங்குடி ஸ்ரீ உத்தராபதீஸ்வரர் கோவில்

கஜமுகாசுரனைக் கொன்ற பாவம் தீர கணபதி வழிபட்டதும், சிறுத்தொண்ட நாயனாருக்கு அருள் புரிந்ததுமான தலம். அப்பர், சம்பந்தர் பாடியுள்ளதலம். திருமருகலிலிருந்து 3 கி.மீ மேற்கில் உள்ளது.

திருச்சீயாத்த மங்கை ஸ்ரீ அயவந்தீஸ்வரர் கோயில்.

திருநீல நக்க நாயனார் அவதாரத்தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. திருமருகலிலிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ளது.

திருப்புகலூர் ஸ்ரீ அக்னிபுரீஸ்வரர் கோவில்

நாகப்பட்டினம் நன்னிலம் சாலையில் உள்ளது. திருநாவுக்கரசு நாயனார் இறைவன் திருவடி சேர்ந்ததும், முருக நாயனார் அவதாரம் செய்ததும் இத்தலத்தில்தான். மூவர் பாடல் பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு செங்கற்களை பொன்கற்களாக மாற்றி அருளிய ஸ்ரீ அக்னிபுரீஸ்வரரை அக்னிதேவன் வழிபட்டதாக வரலாறு.

திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் கோவில்

திருப்புகலூருக்குத் தெற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்று. 108 வைணவத்திருப்பதிகளுள் ஒன்று, இங்கு திருமங்கையாழ்வாருக்குத் திருமந்திர உபதேசம் நடந்தது. குலசேகராழ்வார் பாசுரம் பெற்றதலம். வைணவக் கோவில்களில் நவக்கிரகங்கள் உள்ள சில தலங்களில் இதுவுமொன்று.

இக்கோயிலுக்கருகில் ஸ்ரீ இரனமதீஸ்வரர் என்ற சிவன்கோயில் உள்ளது. இராமர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

நாகப்பட்டினத்தைத் தரிசித்த பின்பு திருநள்ளாறு செல்லுமுன் இத்தலங்களை தரிசித்துச் செல்லலாம்.

வேளாங்கண்ணி ஆரோக்ய மாதா கோவில்

நாகப்பட்டினத்திற்குக் கிழக்கே 15 கி.மீ தொலைவில் திருத்துறைப்பூண்டி செல்லும் பாதையில் கடற்கரையோரத்தில் அமைந்த புனிதத்தலம் அனைத்து மதத்தினருக்கும், சிறப்பாக கிறிஸ்தவர்களுக்கும் இது ஒரு பிரார்த்தனைத்தலம். தங்கும் வசதிகள் உண்டு. திருக்கோளிலி செல்லும் வழியில் இத்தலத்தைத் தரிசிக்கலாம்.

சிவத்தலங்களில் முக்தி தரும் தலங்கள்

1. மதுரை
2. காஞ்சிபுரம்
3. இராமேஸ்வரம்
4. திருவையாறு
5. திருவிடை மருதூர்
6. திருவெண்காடு
7. திருச்சாய்க்காடு

சப்த மங்கள ஸ்தலங்கள் - பூசித்தவர்கள்

சக்கரப் பள்ளி	—	பிராமி
அரி மங்கை	—	மஹேஸ்வரி
சூல மங்கை	—	கௌமாரி
நந்தி மங்கை	—	வைணவி
பசுபதி மங்கை	—	வராகி
தானடி மங்கை	—	மகோதரி
புள்ள மங்கை	—	சாமுண்டி

விடங்கத்தலம் - மூன்று

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் கோவில்

பாண்டிச்சேரி மாநிலத்தில் காரைக்காலிலிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்து தடத்தில் 5 கி.மீ தொலைவிலுள்ளது. சோழ நாட்டின் தென்கரைத் தலங்களிலொன்று. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவர் பாடல் பெற்றதலம். நவக்கிரகத் தலங்களில் சனீஸ்வர பகவானுக்குகந்த தலம். தர்ப்பாரண்யம், நகவிடங்கபுரம், நளேச்சுரம் என இதர பெயர்களால் அழைக்கப்படுகிறது. நான்கு புறமும் பெரிய மதில்களால் சூழப்பெற்ற திருக்கோவில்

இறைவன் : ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர்; ஆதிமூர்த்தி, நள்ளாறர் என்றும் பெயர். சுயம்பு மூர்த்தி; தர்ப்பையினின்று எழுந்தருளியவர். கிழக்கு நோக்கிய வண்ணம் அருள் பாலிக்கிறார்.

இறைவி : ஸ்ரீபோக மார்த்த பூண் முலையாள். பிராணேஸ்வரி என்று மற்றொரு பெயர்.

"போக மார்த்த பூண் முலையாடன்னோடும் பொன்னகலம்" என்று திருஞான சம்பந்தரால் பச்சைப்பதிகம் பாடப் பெற்ற பெருமை பெற்றவள்.

சிறப்பு மூர்த்தி : ஸ்ரீ தியாகராஜர் நக விடங்கத் தியாகர். ஆடும் நடனம் – உன்மத்த நடனம். உன்மத்தம் என்றால் பைத்தியம். மனநிலை குன்றியவர் மேலுங் கீழும் முன்னும் பின்னுமாக ஆடுவது போன்ற நடனம்.

தெற்குப் பக்க வாயில் வழியாக அடையலாம். வெள்ளி விமானத்தில் வீற்றிருக்கிறார். இங்கு பச்சை இரத்தனத்திலான மரகத விடங்கர் ஒரு பேழையில் எழுந்தருளியுள்ளார். இவருக்கு ஐந்து காலங்களிலும்

அபிஷேகம் நடைபெறும். முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்று வந்து ஸ்தாபித்த மூர்த்தி மண்டபத்தில் பல அழகிய ஓவியங்களைக் காணலாம்.

சனீஸ்வர பகவான்

இத்தலத்தின் சிறப்பு மூர்த்தியாகவும் அனுக்ரஹ மூர்த்தியாகவும் எழுந்தருளியுள்ளார். தெற்கு நோக்கிய சன்னிதி, சுவாமி சன்னிதிக்கு வலது புறம் இது அமைந்துள்ளது. தினசரி ஐந்து கால பூஜைகளும், சனிக்கிழமை தோறும் சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நடைபெறுகின்றன. இரண்டரையாண்டுக்கொருமுறை நிகழும் சனிப்பெயர்ச்சியின் போது லட்சக் கணக்கில் பக்தர்கள் வருகை தந்து நள தீர்த்தத்தில் நீராடி சனீஸ்வர பகவானை வழிபடுகின்றனர்.

உற்சவ மூர்த்திக்குத் தங்க காக வாகனமுள்ளது. தனி நவக்கிரக சன்னதி இல்லை.

நளன்

நிடத நாட்டு மன்னன் நளன். அவன் மனைவி தமயந்தி. நளமன்னனை ஒரு தரம் கலி பற்றிக் கொண்டான். தமயந்தியைப் பிரிந்தும், கார்க்கோடகன் என்ற பாம்பு தீண்டப்பட்டும் அல்லலுற்று நள்ளாறு வந்து சனீஸ்வர பகவானைத் துதித்து கலியிலிருந்து விடுபட்டு நளன் தமயந்தியை மீண்டும் அடைந்து ராஜ்யத்தைத் திரும்பவும் பெற்றார்.

தசரதராஜனிடம் ஜோதிடர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நாட்டில் கடுமையான பஞ்சம் சனிபகவானால் ஏற்படும் என்று கூறினார்கள். அரசன் வசிஷ்டரிடம் கேட்க அவரும் அது விதிப்படி நடக்கும் என்று கூறினார். தசரதன் சனி பகவானிடம் போருக்குப் புறப்பட்டார். சனீஸ்வர பகவான் காட்சி தந்து அவனுக்கு அருளினார். அவரை தசரதன் "தசரத கிருத சனைஸ்சர ஸ்தோத்ரம்" என்ற ஸ்தோத்திரத்தால் வணங்கினார். பக்தர்களும் இந்த ஸ்தோத்திரத்தையும், நளனுக்குக் கலி நீங்கிய நள வெண்பாவையும் படித்தால் சனியின் அருள் பெறலாம்.

இதர தெய்வங்கள்

சொர்ண விநாயகர் – ஸ்தல விநாயகர் இவர்.

கற்பக விநாயகர், தக்ஷிணா மூர்த்தி, காளத்தி நாதர்.

நால்வர், அறுபத்தி மூவர், தர்ப்பாரண்யச் சிவலிங்கம் ஒரே வரிசையிலும், சுந்தரர் தனியாகவும் உள்ளார்.

சோமாஸ்கந்த மூர்த்தி – கருங்கல் சிற்பம். இதர விடங்கத் தலங்களிலுள்ள சிவலிங்கங்கள், வள்ளி, தெய்வானை சமேத சுப்ரமணியர், நடராஜர், சிவகாமி, திருமகள், துர்க்கை, ஜ்வரதேவர், பிக்ஷாடனர், பைரவர், நளன் வழிபட்ட நள நாராயணப் பெருமாள், நள லிங்கேஸ்வரர், சண்டேஸ்வரர் முதலியோரும் உண்டு.

இடையனார் கோவில்

சுவாமி சன்னதியில் பலிபீடம் சற்று விலகி உள்ளது. இடையன் ஒருவனுக்கருள் செய்ய வேண்டிப் பொய்க்கணக்கு எழுதிய கணக்கரைத் தண்டிக்கத் தன் சூலாயுதத்தை இறைவன் ஏவினார். அதற்குத் தடங்கலாக இருக்கக் கூடாதென்று பலிபீடம் சற்று நகர்ந்து வழிவிட்டது. அந்நிலையிலேயே இருப்பதாக வரலாறு.

கோயிலினுள் எண்ணெய்க் காப்பு மண்டபம், வசந்த மண்டபம், ஆஸ்தான மண்டபம் முதலிய பல அழகிய மண்டபங்கள் உள்ளன.

தல விருட்சம்

தர்ப்பை; உட்சுற்று வரும்போது சுவாமிக்கு வடக்கில் அமைந்துள்ளது.

தீர்த்தம்

நளதீர்த்தம், நளகூபம், பிரம்மதீர்த்தம் முதலியவை சிறப்புடையவை. இத்தீர்த்தத்தில் நளன் நீராடி இறைவனை வழிபட்டுக் கலி நீங்கப் பெற்றதால் நளதீர்த்தம் எனச் சிறப்புப் பெயர் பெற்றது. மேலும் பிரமன் இந்திரன் மற்றும் பலரும் நீராடி வழிபட்டதாக வரலாறு. சனிப் பெயர்ச்சியின் போது பக்தர்கள் இத்தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்லும் காட்சி காணத்தக்க ஒன்றாகும். குளக்கரையில் நள விநாயகர், கலிதீர்த்த விநாயகர் எழுந்தருளியுள்ளனர்.

விழாக்கள்

வைகாசிமாதம் உத்திரட்டாதியில் கொடியேற்றிப் பதினெட்டு நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இறுதிநாளில் இடையனுக்குக் காட்சி கொடுத்த விழா நடைபெறுகிறது. புரட்டாசி பௌர்ணமி நாளில் தியாகேசரை இந்திரன் வழிபட்டவிழா, நவராத்திரி, விநாயகசதுர்த்தி போன்ற விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

பாடியோர் : அப்பர், சுந்தரர், சம்பந்தர், அருணகிரிநாதர் முதலியோர்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

மேகம் பூண்ட தோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட்டான் அவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடு நள்ளாறனே.

சுந்தரமூர்த்தி நாயனார்

கற்பகத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுதலானைச்
சொற்பதப் பொருள் இருளறுத்தருளும்
தூயசோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப் பழ ஆவணங் காட்டி
அடியனா என்னை ஆளது கொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே.

திருஞானசம்பந்தர்

சமணர்களோடு வாதிடும்போது பதிகங்கள் அடங்கிய கட்டினின்று ஒரு ஏட்டை எடுத்துத் தீயிலிட அது எரியாமல் பச்சையாயிருந்தது. திருநள்ளாற்றில் சம்பந்தப் பெருமான் பாடிய பதிகம் ஆகையால் இப்பதிகங்கள் பச்சைப்பதிகங்கள் எனப் பெயர் பெற்றன. இப்பதிகங்களைப் பாடினால் வழக்கில் வெல்லலாம், பகையை ஒட்டலாம், அரசியலிலும் வெற்றி பெறலாம். இப்பாடல் முழுமையும் கீழே கொடுத்துள்ளோம்.

1. போகம் ஆர்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கண்வெள்
ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோலுடையன்
கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம் பெருமாள்
மேயது நள்ளாறே.

2. தோடுடைய காதுடையன்
தோலுடை யன் தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணும் ஒர் பால் உடையன்
ஏடுடைய மேல் உலகோடு
ஏழ் கடலும் சூழ்ந்த
நாடுடைய நம் பெருமான்
மேயது நள்ளாறே.

3. ஆன்முறையால் ஆற்ற வெண்ணீறு
ஆடிஅ ணி இழையோர்
பால் முறையால் வைத்த பாதம்
பத்தர்ப ணிந்து ஏத்த
மான்மறியும் வெண்மழுவும்
சூலமும் பற்றிய கை
நான் மறையான் நம்பெருமான்
மேயது நள்ளாறே.

4. புல்க வல்ல வார்சடைமேல்
பூம்புனல் பெய்து அயலே
மல்கவல்ல கொன்றை மாலை
மதியோடு உடன் சூழப்
பல்கவல்ல தொண்டர் தம்பொற்
பாதநி ழல் சேர
நல்க வல்ல நம்பெருமான்
மேயது நள்ளாறே.

5. ஏறுதாங்கி ஊர்திபேணி
ஏர்கொள் இள மதியம்
ஆறுதாங்கும் சென்னி மேல்ஒர்
ஆடு அரவம் சூடி
நீறுதாங்கி நூல் கிடந்த
மார்பில் நிரை கொன்றை
நாறுதாங்கு நம் பெருமான்
மேயது நள்ளாறே.

6. திங்கள் உச்சி மேல்விளங்கும்
தேவன் இமையோர்கள்
எங்கள் உச்சி எம்மிறைவன்
என்று அடியே இறைஞ்சத்

தங்கள் உச்சி யால் வணங்கும்
தன்னடி யார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான்
மேயது நள்ளாறே.

7. வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி
விண்கொள்மு ழவு அதிர
அஞ்சிடத்து ஓர் ஆடல் பாடல்
பேணுவது அன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித்
திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான்
மேயது நள்ளாறே.

8. சிட்டம் ஆர்ந்த மும் மதிலும்
சிலைவரைத் தீ அம்பினால்
சுட்டு மாட்டிச் சுண்ண வெண்ணீறு
ஆடுவது அன்றியும் போயப்
பட்டம் ஆர்ந்த சென்னி மேலோர்
பால்ம தியம் சூடி
நட்டம் ஆடு நம்பெருமான்
மேயது நள்ளாறே.

9. உண்ணலாகா நஞ்சு கண்டத்து
உண்டுஉடனே ஒடுக்கி
அண்ணலாகா வண்ண நீழல்
ஆரழல் போல் உருவம்
எண்ணலாகா உள்வினை என்று
எள்க வலித் திருவர்
நண்ணலாகா நம்பெருமான்
மேயது நள்ளாறே.

10. மாசு மெய்யர் மண்டைத் தேரர்
குண்டர்கு ண மிலிகள்
பேசும் பேச்சை மெய்யென்று எண்ணி
அந்நெறி செல்லன் மின்
மூசு வண்டார் கொன்றை சூடி
மும் மதிளும் முடனே
நாசம் செய்த நம் பெருமான்
மேயது நள்ளாறே.

11. தண்புனலும் வெண் பிறையும்
தாங்கிய தாழ் சடையன்
நண்புநல்லார் மல்கு காழி
ஞான சம்பந்த னல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல்
பத்தும் இவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு
உலகில் உறைவாறே.

திருநள்ளாறிலும் அதற்கருகிலுமுள்ள தலங்கள்

திருநள்ளாற்றிலே மாரியம்மன், பிடாரி அம்மன் கோவில்களும் உள்ளன.

தக்களூர்

திருநள்ளாற்றுக்குக் கிழக்கே 2 கி.மீ தொலைவிலுள்ளது. வைப்புத்தலங்களில் ஒன்று.

இறைவன் – ஸ்ரீ திரிலோக நாதர்
இறைவி – ஸ்ரீ தர்ம சம்வர்த்தனி.

தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரி நாதர் கோவில்

திருநள்ளாற்றிலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது. தருமராஜன் வழிபட்டதலம்.

இறைவன் : ஸ்ரீ யாழ்மூரி நாதர்
ஸ்ரீ மதுரமின் அம்மை
சம்பந்தர் பாடல் பெற்றது.

காரைக்கால்

காரைக்காலில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் புனிதவதி. சிறுவயது முதலே சிவபெருமானிடம் மிகுந்த பக்தியுடன் இருந்து வந்தார். பரமதத்தனுக்குப் புனிதவதியை திருமணம் செய்து வைத்தார்கள். காரைக்காலில் இருவரும் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் பரமதத்தனைக் காண வந்த நண்பர்கள் இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தனர். அவர் அவற்றைத் தனது ஏவலாளர் மூலம் வீட்டிற்குக் கொடுத்தனுப்பினார்.

அவ்வமயம் சிவனடியார் ஒருவர் பசியுடன் வந்தார். புனிதவதி அவருக்கு அமுது படைத்து ஒரு மாங்கனியையும் வைத்து உபசரித்தார். உணவுண்டு சிவனடியார் அம்மையாரை வாழ்த்திச் சென்றார்.

பரமதத்தன் வீட்டிற்கு வந்து உணவருந்தும் போது எஞ்சிய ஒரு மாங்கனியை வைத்தார். அது மிகவும் சுவையாக இருந்ததால் மீதமிருந்த ஒரு மாங்கனியையும் கொண்டுவரச் சொன்னார்; ஒன்றும் செய்வதறியாமல் புனிதவதி இறைவனை வேண்ட அவர் ஒரு மாங்கனியைத்தந்தார். அந்தப் பழம் மிகவும் இனிமையாக இருந்தது. இதை எங்கிருந்து பெற்றாய் எனக்கேட்க, மனைவி உண்மையைச் சொன்னார். அப்படியானால் இன்னொரு கனியைத் தருவித்துக் கொடு என்று கணவன் கேட்க, இறைவனை வேண்டி மற்றொரு கனியைப் பெற்று அவர் கணவரிடம் கொடுத்தார். கையில் வாங்கியவுடன் அது மாயமாய் மறைந்துவிட்டது. பரமதத்தன் தன் மனைவி ஒரு தெய்வப்பிறவி என்று நினைத்து, அவரைப் பிரிந்து அயல்நாடு சென்று திரும்பி வந்து மறுபடியும் வேறு ஒரு பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருபெண் குழந்தை பிறந்தது. அதற்குப் புனிதவதி என்று பெயர் சூட்டினார்.

கணவன் திரும்பியது கண்டு பெற்றோர் புனிதவதி அம்மையாரைக் அழைத்துச்சென்று பரமதத்தனிடம் ஒப்படைத்தனர். அவ்வமயம் அவர் அம்மையாரின் காலில் விழுந்து தன்னையும், தன் குடும்பத்தினையும் ஆசீர்வதிக்குமாறு வேண்டினார். கணவருக்கே வேண்டாத இளமை தனக்கும் வேண்டாமென நினைத்த புனிதவதி இறைவனை வேண்டி உடலின் வனப்பைப் போக்கிப் பேய் வடிவத்தினை அருளுமாறு வேண்டிப் பெற்றார். பிறகு பல தலங்களுக்குச் சென்று வழிபட்டு "அற்புதத் திருவந்தாதி", "இரட்டை மணிமாலை" போன்ற திருப்பிரபந்தங்கள் பாடி இறைவனடி சேர்ந்தார். இவரே காரைக்கால் அம்மையார் எனப் பெயர் பெற்றார்.

காரைக்கால் அம்மையார் கோயில் காரைக்காலில் உள்ளது. ஆண்டுதோறும் மாங்கனி விழா சிறப்பாக இங்கு நடைபெறுகிறது.

திருத்தெளிச்சேரி ஸ்ரீ பார்வதீசர் கோவில்

காரைக்கோவில் பத்து ரயில் நிலையத்திற்கு வடக்கே 1 கி.மீ தொலைவிலுள்ளது, இது பார்வதி தேவி தவம் செய்த தலம்.

இறைவன் – பார்வதீசர்.

இறைவி – சுயம்வர தபேஸ்வரி.

உற்சவமூர்த்தி – கிராதமூர்த்தி; சிறப்புடையது; சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

அம்பகரத்தூர் ஸ்ரீ பத்திரகாளி கோவில்

திருநள்ளாற்றிற்கு மேற்கே கும்பகோணம் பேருந்து தடத்திலுள்ளது. சிறப்புடைய கோவில்.

நெடுங்காடு ஸ்ரீ தான்தோன்றி நாதர் கோவில் திருநள்ளாற்றிற்கு வடமேற்கே 5 கி.மீ தொலைவிலுள்ளது.

இறைவன் : தான்தோன்றி நாதர்.

இறைவி : நெடுந்துயரந் தீர்த்த நாயகி.

திருமலைராயன்பட்டினம் ஸ்ரீ சடாயுபுரீசர் கோவில்

காரைக்காலுக்குத் தெற்கே 5 கி.மீ தொலைவிலுள்ளது. சடாயு வழிபட்டதலம்.

இறைவன் : சடாயுபுரீசர்.

இங்குள்ள சட்டை நாதர் சன்னதி சிறப்புடையது. கவி காளமேகப் புலவரும், அதிமதுரக் கவிராயரும் வாழ்ந்த இடம்.

மேலும் நகருக்கருகிலேயே ஆயிரங்காளியம்மன், இராஜ சோளீச்சுரம் உடையார், பிரசன்ன வேங்கடேசப் பெருமாள், கோதண்ட ராமசாமி கோவில் முதலிய பல கோவில்கள் உள்ளன.

திருவேட்டக்குடி ஸ்ரீ திருமேனியழகர் கோவில் சம்பந்தர் பாடல் பெற்றது. காரைக்காலிலிருந்து 12 கி.மீ தொலைவிலுள்ளது.

இறைவன் – திருமேனியழகர்

இறைவி – சாந்த நாயகி

கடற்கரையோரத்தில் அமைந்த கோவில்; இங்கு நடைபெறும் மாசிமக விழா சிறப்புடையது.

திருநள்ளாற்றையும், அருகிலுள்ள தலங்களையும் தரிசித்த பின்பு அடுத்த விடங்கத் தலம் நோக்கி யாத்திரையைத் தொடங்குவோம்.

விடங்கத் தலம் நான்கு /

வேதாரண்யம் ஸ்ரீ வேதாரண்யேஸ்வரர் கோவில்

இது நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்குக் கிழக்கே 35 கி.மீ தொலைவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. ரிக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் வழிபட்டதால் திருமறைக்காடு எனப் பெயர் பெற்றது. மறை (வேதங்கள்) களால் பூட்டிக்கிடந்த கதவைத் திறக்கும்படிச் செய்யத் திருநாவுக்கரசர் "திறக்கப்பெற பதிகமும்", கதவை மூடத் திருஞான சம்பந்தர் "திருக்காப்பிட்ட பதிகமும்" பாடி மூடிக்கிடந்த கதவைத் திறந்து மூடுமாறு வழி செய்தனர். மேலும் சுந்தர மூர்த்தி நாயனார் பாடலுடன் மூவர் பாடலும் பெற்ற பெருமையுடையது இச்சோழ நாட்டு தென்கரைத்தலம். சேரமான் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் வந்து தரிசனம் செய்துள்ளார்.

இராவணனைக் கொன்ற வீரஹத்தி தோஷம் நீங்க இராமர் இங்கு வழிபட்டார். இராவணன் வேகவதி நதியில் நீராடி இறைவனிடம் பல வரங்களைப் பெற்றான். ஆதி சேது என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. இக்காரணத்தால் இத்தலம் இராமாயணத்துடன் தொடர்புடையது என்பது பெறப்படும்.

நசிகேது, சுவேதகேது முதலியோர் தவஞ்செய்த தலம்.

பரஞ்சோதி முனிவரும், தாயுமான சுவாமிகளும் அவதரித்த புண்ணிய பூமி.

சரித்திரப் புகழ்பெற்ற நாட்டு விடுதலைப் போரில் உப்பு சத்தியாக்கிரகம் இங்கு நடைபெற்றது, உப்பளங்கள், புகையிலை, வனவிலங்கு சரணாலயம் போன்ற இதர சிறப்புகளுமுண்டு.

இரண்டு கோபுரங்கள் கிழக்கிலும் மேற்கிலுமாக நம்மை வரவேற்கின்றன.

மகாபலி

"வேதாரண்யம் விளக்கழகு" என்று கூறுவர். சிவ பெருமான் சன்னிதியிலுள்ள விளக்கிலிருக்கும் நெய்யை உண்பதற்கு ஒரு எலி முயன்ற போது, விளக்குத்திரி தூண்டப்பட்டு பிரகாசமாக எரிந்தது. இப்புண்ணியத்தால் அந்த எலி மறுபிறப்பில், மகாபலி என்ற அரசனாகப் பிறந்து சிறப்பாக ஆட்சி செய்ததாக வரலாறு.

இறைவன் : ஸ்ரீ வேதாரண்யேஸ்வரர். வேதவனேசர், மறைக்காட்டீசர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். உமாமகேஸ்வரர், மறைக்காட்டுறையும் மணாளர்:– இவர் கருவறையில் இறைவருக்குப் பின்புறம் அம்மையப்பராக, சந்தனப் பூச்சுடன் மணக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். ஆண்டுக்கொருமுறை சித்திரை மாதத்தில் அபிஷேகம் முடிந்து பின்னர் சந்தனக்காப்புடன் ஆண்டு முழுவதும் காட்சித் தருகிறார். அகத்திய முனிவருக்குத் திருமணக் காட்சியருளிய அதேகோலத்தில் பக்தர்களுக்கும் காட்சியளிக்கிறார்.

இறைவி : ஸ்ரீ வீணாவாத விதூஷணி, யாழைப் பழித்த மொழியுமையாள்; இது சக்தி பீடங்களில் சுந்தர பீடமாகும்.

சிறப்பு மூர்த்தி : அருள்மிகு தியாகராஜர்

முசுகுந்த சக்ரவத்தி இந்திரனிடமிருந்து பெற்றுவந்த மூர்த்தியை இங்கு பிரதிஷ்டை செய்தார். இவர் நடனம், உறம்ஸ நடனம், அன்னம் போல் மெதுவாக அடி எடுத்து வைத்து உடலை அசைத்தாடும் நடனம். இரத்தின சிம்மாசனம்; இங்குள்ள மரகதலிங்கத்திற்குப் புவனி விடங்கர் என்று பெயர். தினசரி இருகால பூஜை உண்டு.

இதர தெய்வங்கள்.

வீரஹத்திப் பிள்ளையார்:- ஸ்தல விநாயகர்.

இராமர் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக் கொள்ள வழிபட்ட விநாயகர். வெளிச்சுற்றில் மேலக்கோபுரம் அருகில் உள்ளார்.

வேதவனப் பிள்ளையார், கன்னி விநாயகர், மேலக்குமாரர், முருகன், காசி விஸ்வநாதர் மூர்த்தங்களும் உண்டு. நடராஜர் தேவசபையில் எழுந்தருளியுள்ளார். இராமநாதலிங்கம், சோழீஸ்வரலிங்கம், லக்ஷ்மி,

சரஸ்வதி, அன்னபூரணி, துர்க்கை இவர்களை இத்தலத்தில் சிறப்பாக வழிபடுபவர். காட்சி கொடுத்தவர், சந்திரசேகரர், ரிஷபமூர்த்தி பிட்சாடனர், அர்த்த நாரீசர், சுந்தரர், நசிகேது, சுவேதகேது முதலியோரின் உற்சவ மூர்த்தங்களுண்டு. அறுபத்து மூன்று நாயன்மார்கள், நவக்கிரகங்கள் வரிசையாக அமர்ந்துள்ளனர்.

தீர்த்தம்

மணிகர்ணிகை – காசியில் உள்ளது போன்ற சிறப்புடையது. வேத நதி, கோடி தீர்த்தம் மற்றும் தொண்ணூற்றாறு தீர்த்தங்களுமுள்ளன. புண்ணிய காலங்களில் இங்குள்ள கோடி தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பாகும்.

ஸ்தல விருக்ஷம்

வன்னிமரம்; இதனடியில் விஸ்வாமித்திரர் தவஞ்செய்ததாக வரலாறு.

சிற்பங்கள்

யாளிகளின் வாயினுள் உருளும் கருங்கல் உருண்டைகள். அவற்றினின்று தொங்கும் கருங்கல் சங்கிலிகள், பனிரண்டு இராசிகள், இருபத்தேழு நக்ஷத்திரங்கள், ஸ்தல வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் முதலியவை சிறப்பாக விளங்குகின்றன. கோபுர விமானத்திலும் அழகிய சிற்பங்களைக் காணலாம்.

மண்டபங்கள்

இராஜநாராயண மண்டபம், வன்னியடி மண்டபம், பதினாறு கால் மண்டபம் முதலியன அமைந்துள்ளன.

பாடியோர்

திருநாவுக்கரசர் – மறைகளால் மூடியிருந்த கதவைத் திறக்கப்பாடிய பதிகங்கள் பதினொன்று, அவற்றில் ஒன்று:

பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணி னார் வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னால் உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருளச் செய்ம்மினே

திருஞானசம்பந்தர் பதிகம் பாடி கதவை மூடவும் மீள மூடித்திறக்குமாறும் செய்தார்.

சதுரம் மறை தான் துதி செய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக் காட்டுறை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்க எனக்குள்
கதவம் திருக் காப்புங் கொள்ளுங் கருத்தாலே.

எனத் தொடங்கி, "*திருக்காப்பிட்ட திருப்பதிகங்கள்*" பதினொன்றும்

விடைத்தவர் புரங்கள் மூன்றும் விரிசிலை முனிய வாங்கி
படைத்தொழில் புரிந்து நின்றோம் பரமனே பரமயோகி
கடைத்தலை புகுந்து நின்றோம் கலி மறைக்காட மர்ந்தீர்
அடைத்திருங் கதவு தன்னை யப் படித்தாளினாலே

என மீண்டும் பதினொரு பதிகங்கள் பாடினார்.

கோளறுபதிகம்

அப்பரடிகளும், சம்பந்தரும் திருமறைக் காட்டில் தங்கியிருந்தபோது பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் சைவம் தழைக்க திருஞான சம்பந்தரை அழைத்து வருமாறு ஏவலரை அனுப்பியிருந்தனர். சம்பந்தர் உடனே புறப்படத் தயாரானார். அவ்வமயம் அப்பர் சுவாமிகள் சம்பந்தரைத் தடுத்து சமணர்கள் தனக்களித்த தீமைகளைக்கூறி நீர் அங்கு செல்ல நான் சம்மதியேன் என்று கூறினார்.

சம்பந்தர் "சமணர்கள் புரியும் தீமையை அழித்து சைவம் தழைக்குமாறு செய்து வருவேன். உமது ஆணை" என்று கூறினார். அவ்வமயம் திருநாவுக்கரசர் "நாளும் கோளும் இப்பொழுது நன்னிலையிலில்லை" என்று கூறினார். சம்பந்தரோ அதைக்கேட்டு நாளும் கோளும் என் செய்யும் என்று கோளறு திருப்பதிகம் பாடினார். இப்பதிகங்களைத் தினசரி நாமும் ஓதிவந்தால் நவக்கிரகங்கள் தரும் துன்பத்திலிருந்து விடுபடலாம்.

1. *வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்*
   மிக நல்ல வீணை தடவி
   மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
   உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

2. என்பொடு கொம்பொடாமை இவை மார்பு இலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன் பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்து அதனால்
ஒன்பது ஒன்றொடு ஏழு பதினொட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

3. உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆன பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

4. மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்து அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

5. நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடி மேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

6. வாள் வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள் மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

7. செப்பிள முலை நன் மங்கை ஒரு பாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்து அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

8. வேள்பட வழி செய்து அன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்து அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

9. பலபல வேட மாகும் பரனாரி பாகன்
பசு வேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலை கடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

10. கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடி யாரவர்க்கு மிகவே.

11. *தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி*
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

வேதாரண்யம் புவனி விடங்கரைத் தரிசித்துப் பின்பு அருகிலுள்ள தலங்களைத் தரிசிக்கச் செல்வோம்.

நளவெண்பா

என்காலத்[து] உன்சரிதம் கேட்டாரையான் அடையேன்
மின்கால் அயில் வேலோய் மெய்யென்று – நன்காவி
மட்டு இறைக்கும் சோலை வளநாடன் முன்நின்று
கட்டுரைத்துப் போனான் கலி.

நளவெண்பா ஓதும் பலன்

நளன் சரித்திரம் மிகவும் விசேஷம் வாய்ந்தது. இச்சரிதத்தைக் கேட்பவர்களுக்கு ஸ்ரீ சனீஸ்வரனால் ஒரு போதும் துன்பமில்லை. இவ்வாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான் நளனுக்கு வரமளித்துள்ளதாக நளவெண்பா கூறுகிறது.

வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள தலங்கள்

அகத்தியான்பள்ளி ஸ்ரீ அகஸ்தியர் கோவில்

இது வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரை செல்லும் வழியில் 2 கி.மீ தொலைவிலுள்ளது. அகத்தியர் தவம் செய்த இடம். இயமன் வழிபட்டது.

இறைவன் : அகஸ்தீஸ்வரர்

இறைவி : பாகம் பிரியாள்

அகத்தியர் : திருமேனி உள்ளது; சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

கோடிக்கரை ஸ்ரீ குழகர் கோவில்

கோடிக்கரை காட்டிற்குள் உள்ளது.

சுந்தரர், இராமலிங்க சுவாமிகள் பாடல் பெற்ற தலம்.

இறைவன் : அமிர்த கடேஸ்வரர்

இறைவி : அம்மையார் தடங்கண்ணி அஞ்சானாட்சி, காடு கிழாள் எனவும் பெயருண்டு.

முருகர் : குழகர் ஒரு முகத்துடன் ஆறு திருக்கரங்களுடன் அபூர்வ அமைப்புடன் உள்ளார்.

அமிர்த கணபதி, கோடி விநாயகர், ஒரே வரிசையில் அமர்ந்த நவக்கிரகங்கள் முதலிய இதர தெய்வங்கள் மூர்த்தங்களும் உண்டு.

கோயிலுக்குக் கிழக்கே கடல் உள்ளது. ருத்ர கோடி தீர்த்தம் என்று பெயர். புண்ணிய காலங்களிலும், ஆடி, தை அமாவாசை தினங்களிலும் இங்கு ஆயிரக்கணக்கில் மக்கள் நீராடி வழிபடுவர்.

கோடிக்கரை கலங்கரை விளக்கம், சித்தர் கட்டம் முதலியவை பார்க்க வேண்டிய இடங்கள்.

தோப்புத்துறை அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோவிலும், அருள்மிகு கைலாசநாதர் கோவிலும் அருகில் உள்ளன.

ஸ்ரீராமபாதம்

இராமர் சேது பந்தனம் செய்ய எண்ணி நின்று மாகடலை நோக்கிய இடம். ஒரு மண்டபத்தில் ஸ்ரீராம பாதங்கள் அமைந்து உள்ளன.

விடங்கத்தலம்- ஐந்து

திருக்காறாயில் - ஸ்ரீ கண்ணாயிரமுடையார் கோவில்

இது திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் திருவாரூருக்குத் தெற்கில் 15 கி.மீ தொலைவில் உள்ளது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். சப்த விடங்கத் தலங்களில் இது ஆதி விடங்கத்தலம். திருவாரூர், திருத்துறைப்பூண்டியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

முசுகுந்தர் இந்திரனிடமிருந்து பெற்று வந்து ஏழு மூர்த்திகளுள் ஒன்றை இங்கு ஸ்தாபித்து வழிபட்டு வந்தார். இறைவன் பதஞ்சலி முனிவருக்கு ஏழு விதமான தாண்டங்களையும் காட்டியதாகவும், கபில முனிவருக்கு காட்சி தந்ததாகவும் வரலாறு. திருக்காறை வாசல், காரவாசல் என்றும் பெயருண்டு. காரா கருஸ்தலம் பஞ்ச கூடபுரம் என்று சொல்லப்படும் ஐந்து தலங்களில் ஒன்று.

இறைவன் : ஸ்ரீ கண்ணாயிரமுடையார்

கண்ணாயிரநாதர். சுயம்புமூர்த்தி; பார்வையிழந்த பெண் பக்தை ஒருவருக்குப் பார்வையளித்து ஒளி ஆயிரம் மடங்கு பெருகிக் காட்டுமாறு அருளியதால் இப்பெயர் பெற்றார் என்று வரலாறு.

இறைவி : ஸ்ரீ கைலாசநாயகி; நின்ற திருக்கோலம்.

சிறப்பு மூர்த்தி : அருள்மிகு தியாகராஜர்

உயரமான சபையில் அமர்ந்துள்ளார். ஆதிவிடங்கர் வீரசிங்காசனம் ஆடிய நடனம் – குக்குட நடனம். குக்குடம் என்றால் கோழி. கோழி வேகமாகவும், நேராகவும், பக்கவாட்டிலும் ஓடுவது போன்ற நடனம். வெள்ளிப் பேழையில் மரகத லிங்கம் உள்ளது. தினசரி காலையில் அபிஷேகம் உண்டு. எதிரில் சுந்தரர் அமைந்துள்ளார்.

இதர மூர்த்திகள்

கடுக்காய்ப் பிள்ளையார்

வணிகன் ஒருவன் ஜாதிக்காய் மூட்டைகளை வியாபாரத்திற்காகக் கொண்டு வந்தான். பிள்ளையார் மாற்று வடிவத்தில் வந்து அது என்ன

மூட்டை என்று வினவ இனாம் அளிக்க வேண்டுமோ என அஞ்சி இவை அனைத்தும் கடுக்காய் மூட்டைகள் என மாற்றிச்சொல்லிவிட்டான். அவனுக்குப் புத்தி புகட்ட எண்ணி விநாயகர் அத்தனை ஜாதிக்காய்களையும் கடுக்காய்களாகவே மாற்றிவிட்டார். வணிகன் தவறுணர்ந்து மன்னிப்புக் கேட்க மீளவும் அவற்றை ஜாதிக்காய்களாக மாற்றித்தந்தார். இக்காரணம் கொண்டு இப்பிள்ளையார்க்கு இப்பெயர் வந்தது.

நடராஜ சபை : மூலவருக்குப் பின்புறம் உள்ளது.

விநாயகர், ஆறுமுகர், மகாவிஷ்ணு, சரஸ்வதி, கஜலக்ஷ்மி, பைரவர் காட்சிதந்த நாயனார் மூர்த்தங்கள் உண்டு; உற்சவ மூர்த்தம் – பார்வையிழந்த கணிகைக்குக் காட்சிதந்தவர்.

தலமரம் – பலா.

தீர்த்தம் – பிரமதீர்த்தம் – குளம்

சேஷதீர்த்தம்– கிணறு; இதன் நீரைப் பௌர்ணமி தோறும் பருகிவந்தால் பிணிகள் தீரும் என்று நம்பிக்கை.

பாடியோர் – சம்பந்தர், பரணதேவ நாயனார், இராமலிங்க சுவாமிகள்.

"நீரானே நீள்சடை மேலோர் நிரை கொன்றைத்
தாரானே தாமரை மேலயன் தான் தொழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே என்பவர் ஊனமிலாதவரே' – சம்பந்தர்.

தலபுராணம்

செங்கமலை வாணியுறை காறாயில் ஆயிரங்கள் சிவன் செம்பாதி
அங்க மதில் தங்கி உயிர் அத்தனையும் சுகானுபவ மாரச் சந்தி
கங்குல், பகல் எனும் மூன்று காலத்தும் பொதுச் சிறப்பிற் கடைக் கணித்து
மங்களத்தைச் செய்தருளும் கைலாஸ நாயகியை வாழ்த்தி வாழ்வாம்.

திருக்காறாயிரைத் தரிசித்து அருகிலுள்ள தலங்களையும் தரிசிப்போம்.

திருக்காறாயிலுக்கு அருகிலுள்ள தலங்கள்

திருநெல்லிக்காவல் ஸ்ரீ நெல்லிவனேஸ்வரர் கோவில்

திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் 16 கி.மீ தொலைவில் உள்ளது. இரயில் நிலையமும் உள்ளது. பஞ்ச கூடபுரம் என்று

சொல்லப்படும் ஐந்து தலங்களில் ஒன்று. மற்றவை நாட்டியத்தான்குடி, காறாயில், திருத்தெங்கூர், நமசிவாயபுரம் என்பவை.

இறைவன் : நெல்லிவனேஸ்வரர்

இறைவி : மங்கள நாயகி

சம்பந்தர் பாடல் பெற்ற சோழநாட்டு தென்கரைத்தலம்.

திருநாட்டியத்தான்குடி
ஸ்ரீ மாணிக்கவண்ணர் கோவில்

இதுவும் திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ளது. சுந்தரர் பாடல்பெற்ற சோழநாட்டுத் தென்கரைத்தலம். இறைவன் இறைவியுடன் சுந்தரருக்காக உழவன், உழத்தியாக வயலில் நடவுநட்டுத் திருவிளையாடல் புரிந்ததலம்.

இறைவன் : மாணிக்க வண்ணர்

இறைவி : மங்களாம்பிகை

கோட்புலி நாயனார் அவதாரத்தலம்.

திருத்தெங்கூர் ஸ்ரீ ரஜதகிரீஸ்வரர் கோவில்

திருநெல்லிக்காவலுக்கருகில் உள்ளது. இலக்குமியும், நவக்கிரகங்களும் வழிபட்டதலம்.

இறைவன் : வெள்ளி மலை நாதர்

இறைவி : பெரிய நாயகி

இது சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலங்களைத் தரிசித்துப் பின்பு அடுத்த விடங்கத்தலம் நோக்கிப் பயணத்தைத் தொடர்வோம்.

விடங்கத்தலம் ஆறு

திருவாய்மூர் ஸ்ரீ வாய்மூர் நாதர் கோவில்

இத்தலம் எட்டிக்குடி முருகன் கோவிலுக்கருகிலுள்ளது. திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினத்திலிருந்து பேருந்து வசதிகள் உண்டு. வேதாரண்யத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த நாவுக்கரசரை "வாய்மூருக்கு வா" என இறைவன் அழைத்து வந்து காட்சி தந்த தலம். சூரியன் வழிபட்ட தலமாதலால் ஆண்டுதோறும் பங்குனி 12, 13 தேதிகளில் சூரிய கிரணங்கள் சுவாமிமேல் படுகின்றன. ஈசன் அம்பிகையுடன் திருஞானசம்பந்தருக்கு நடனக் காட்சி நல்கிய தலம். முசுகுந்த சக்ரவர்த்தி வழிபட்ட தலம்.

இறைவன் : வாய்மூர் நாதர்
சுயம்புலிங்கம்.

இறைவி : க்ஷீரோப வசனி – பாலினும் நன்மொழியாள்

சிறப்பு மூர்த்தி : தியாகராஜர், நீலவிடங்கர் – ஆடிய நடனம் கமல நடனம். நீரில் பூத்திருக்கின்ற தாமரை மலர் அந்நீரின் அசைவிற்கு ஒத்து கவிழாமலும், நிலை பெயராமலும் அசைவது போன்றது. (கமலம் – தாமரை)

இரத்தின சிம்மாசனம்.

தினசரி விடங்கருக்கு அபிஷேகம் உண்டு.

இதர மூர்த்திகள்.

நடராஜர், வேதாரண்யேஸ்வரர், வள்ளி, தெய்வயானை சமேத சுப்ரமணியர், மகாலக்ஷ்மி, ரிஷப தக்ஷிணாமூர்த்தி, எட்டு பைரவ மூர்த்திகள் உண்டு. நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன.

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

தலமரம் : பலா

பாடியோர் : திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்.

தளிர் இள வளர் என உமை பாடத்
தாளம் மிடவோர் தழல் வீசிக்
கிளர் இள மணியர வரையார்த்து
ஆடும் வேடக் கிறிமையார்
விளர் இள முலையவர்க்கு அருள் நல்கி
வெண்ணீறு அணிந்தோர் சென்னியின் மேல்
வளர் இள மதியமொடு இவரானீர்
வாய்மூர் அடிகள் வருவரே.

– ஞானசம்பந்தர்

எங்கே என்னை இருந்திடந் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார தென்கொலோ
மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்கு கின்றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மா சொல்லி
என்னை வாவென்று போனார தென்கொலோ

என்று அப்பர் சுவாமிகள் வியந்து பாடுகின்றார்.

அருகிலுள்ள தலங்கள்

திருத்துறைப்பூண்டி ஸ்ரீ பவஔஷதீஸ்வரர் கோவில்

இத்திருக்கோவில் வேதாரண்யம் செல்லும் பாதையில் உள்ளது.

இறைவன் : பிறவி மருந்தீசர்

இறைவி : பெரியு நாயகி

கஜசம்ஹார மூர்த்தி, அகத்தியருக்குத் திருமணக்காட்சி நல்கிய வேதாரண்யேஸ்வரர் முதலி மூர்த்தங்கள் தரிசிக்கத் தக்கவை.

இனிக் கடைசியாக ஏழாவது விடங்கத்தலம் நோக்கிச் செல்வோம்.

விடங்கத்தலம் ஏழு

திருக்கோளிலி ஸ்ரீ கோளிலி நாதேஸ்வரர் கோவில்

திருக்குவளை என்றழைக்கப்படும் இத்தலம் திருவாரூர் எட்டிக்குடி வழியில் திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் 20 கி.மீ தொலைவில் திருவாய்மூருக்கு அருகில் உள்ளது. சப்த விடங்கத் தலங்களில் இது அவனி விடங்கத் தலம். நவக்கிரகங்கள் வழிபட்டதால் கோளிலி என்று இத்தலம் அழைக்கப்படலாயிற்று. பீமன் பகாசுரனைக் கொன்ற பிரமஹத்தி தோஷத்தை இங்கு வழிபட்டுப் போக்கிக்கொண்டதாக வரலாறு. இதற்குச் சான்றாக கோபுரத்தில் பகாசுரன், பிரமஹத்தி உருவங்கள் உள்ளன. கோவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இவ்வூரில் வசித்து வந்த குண்டையூர்க் கிழார் சுந்தரருக்காக, திருவாரூருக்கு நெல் அனுப்பி வருவது வழக்கம். ஒருமுறை பஞ்சம் காரணமாக நெல் அனுப்ப இயலாத நிலையில் இறைவனை வேண்டினார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு நெல் மலையையே "தான்யமேரு" வாக இறைவன் தந்தருளினார். அதைத் திருவாரூருக்கே எடுத்து வந்து தருமாறு இறைவனை வேண்டி சுந்தரர் திருப்பதிகம் பாடினார்.

"நீள நினைத்தடியேன் உமை
நித்தலுங் கை தொழுவேன்
வாளன கண் மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்
சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித்தரப் பணியே"

இறைவனும் பூதகணங்கள் மூலம் அந்நெற்குவியலை எடுத்துச்சென்று திருவாரூரில் சுந்தரர் இல்லத்தில் சேர்ப்பித்தார் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் வண்ணம் இன்னும் மாசி மாதத்தில் நெல்

அட்டிச் செல்லும் விழா நடைபெறுகிறது. இக்குண்டையூர்க் கிழார் மதுரையம்பதியைத் தரிசிக்க விரும்பினார். அவருக்கு இறைவன் இத்தலத்திலேயே மதுரை ஈசனாகத் தரிசனம் தந்ததாக வரலாறு.

இறைவன் : பிரமபுரீஸ்வரர்
கோளிலி நாதர்.
வெண்மணலால் ஆன சிவமூர்த்தம்.

நவக்கிரகங்களுக்கு அருள் புரிந்ததால் கோளிலி நாதர் எனப்பெயர் பெற்றார்.

இறைவி : வண்டமர் குழலி.
சிறப்பு மூர்த்தி : தியாகராஜர்.

ஊழிப்பரன், அவனிவிடங்கத் தியாகர் என்றும் பெயர். சுவாமி சன்னிதிக்குத் தென்புறம் உள்ளார்.

நடனம் – பிருங்க நடனம். பிருங்கம் என்றால் வண்டு, வண்டு மலரைச் சுற்றிச் சுற்றி வந்து மலரில் அமர்வது போன்று சுழன்றும், நிலைக்கு வந்தும் ஆடும் நடனம்.

அம்பிகை : நீலோற்பலாம்பாள்.

தியாகவிநாயகர், சுந்தரவடிவேலர் மூர்த்தங்கள் உள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார், பரவையாருடன் காட்சி தருகின்றார்.

இதர மூர்த்திகள்

விஸ்வநாதர், விசாலாட்சி சொக்கலிங்கம், அண்ணாமலையார், நடராஜர், அகத்தியர் பூஜித்த லிங்கம், நால்வர், மகாலக்ஷ்மி, சிவலோக விநாயகர், முருகப்பெருமான் மூர்த்தங்களையும் வழிபடலாம்.

நவக்கிரகங்கள் ஒரு முகமாகத் தெற்கு நோக்கிய வண்ணம் உள்ளனர்.

தீர்த்தம்

பிரமதீர்த்தம் – கோயிலுக்கெதிரிலுள்ளது. இந்திரதீர்த்தம். விநாயக தீர்த்தம், சக்தி தீர்த்தம் – அம்பாள் சன்னதியில் உள்ள கிணறு இவையும் இங்குள்ள சிறப்பான தீர்த்தங்களே..

பாடியோர்

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், இராமலிங்க அடிகள்.

நன்று நகு நாண்மலரால்
நல்லிருக்கு மந்திரங்கொண்டு
ஒன்றிவழி பாடு செயல்
உற்றவன்றன் ஒங்குயிர்மேல்
கன்றி வரு காலன் உயிர்
கண்டு அவனுக்கு அன்றளித்தான்
கொன்றைமலர் பொன் திகழும்
கோளிலி எம் பெருமானே

– சம்பந்தர்

மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான் மழுத்
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
கொக்க மர்பொழில் சூழ்தகு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே

– அப்பர்

இத்தலத்தை வழிபட்ட பின்பு அருகிலுள்ள மற்ற தலங்களுக்குச் செல்வோம்.

சிவலிங்கம் ஏழு வகைகளாக அமையும்

1. சுயம்பு – தானே தோன்றியது
2. தெய்வீகம் – தேவர்களால் வழிபடப்பட்டது
3. தேவிகம் – தேவியால் வழிபடப்பட்டது
4. காணகம் – காணாத பார்வையில் நிறுவப்படுவது
5. முனிவம் – முனிவர்களால் நிறுவப்பட்டது
6. மனிதம் – மனிதர்களால் நிறுவப்பட்டது
7. பாணம் – ஆற்றிலிருந்து கிடைத்தது

திருக்கோளிலிக்கு அருகிலுள்ள தலங்கள்

எட்டிக்குடி ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோவில்

இது திருக்கோளிலிக்கருகிலுள்ளது. இறைவன் ஆறுமுகங்கள் பனிரண்டு கரங்களுடன், வள்ளி, தெய்வயானையுடன் மயிலின் மீதமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

இங்கு சௌந்தரேஸ்வரர், ஆனந்தவல்லி மற்றும் பல சன்னிதிகளுமுள்ளன.

அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்றதலம்.

வலிவலம் ஸ்ரீ இருதயகமல நாதேஸ்வரர் கோவில்

திருவாரூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ளது. கோச்செங்கணான் கட்டிய மாடக்கோவில்.

இறைவன் : இருதய கமல நாதேஸ்வரர்

இறைவி : வாளையங்கண்ணி

மூவர் பாடல் பெற்றதலம்.

வலியன் (கரிக்குருவி) பூஜித்ததால் வலிவலம் எனப் பெயர் பெற்றது.

கச்சனம் : ஸ்ரீ கைச்சினேஸ்வரர் கோவில்.

வலிவலத்திற்கருகில் உள்ளது. இந்திரன் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டதலம்.

இறைவன் : கைச்சினேஸ்வரர்

இறைவி : சுவேத வளை நாயகி

இத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது.

இங்குள்ள ரிஷபாரூடரான தக்ஷிணாமூர்த்தி தரிசிக்கத் தக்கவர்.

முடிவுரை

சப்த விடங்கத் தலங்களைப் பற்றி விரிவாகவும், மேலும் அருகிலுள்ள சில தலங்களைப் பற்றிய முக்கிய தகவல்களையும் இயன்றவரை சேகரித்து இந்நூலில் கொடுத்துள்ளேன். சமீப காலமாக அன்பர்களிடையே கோவில்களுக்குச் சென்று வழிபட வேண்டும் என்ற உணர்வு அதிகமாக உள்ளது. ஆன்மீகப் பத்திரிகைகள் தவிர, மற்ற பத்திரிகைகள், தினசரி செய்தித் தாள்களிலும் அவ்வப்போது தலங்களைப் பற்றிய செய்திகளை அளித்து வருகிறார்கள். அரசு சுற்றுலாத் துறையினரும் ஆன்மீக சுற்றுலா ஏற்பாடு செய்து நடத்தியும் வருகின்றனர். தனியார் நிறுவனங்களும் இத்துறையை மிக்க ஈடுபாட்டுடன் நடத்தி வருகின்றனர். பக்தர்களும் தனியாகவும் குழுவாகவும் யாத்திரை சென்று வழிபட்டு வருகின்றனர்.

இவ்வகையில் விடங்கத் தலங்களைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்களுக்கு இந்நூல் உபயோகமாக இருக்குமென நம்புகிறேன் திருவாரூர், நாகப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய மூன்று இடங்களிலும் திருக்கோவில்கள் நகரிலேயே அமைந்துள்ளன. திருநள்ளாறு காரைக்கால் அருகில் உள்ளது. மற்ற மூன்றும் கிராமங்களில் உள்ளன. ஆகையால் அன்பர்கள் தங்குவதற்கு அருகில் உள்ள நகரங்களையே நாடவேண்டும். சென்றடைய பேருந்து, இரயில் வசதிகளுமுண்டு.

பெரும்பாலும் அனேக கோவில்கள் காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும் மாலையில் 5.00 முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கும். இந்நேரங்களில் வழிபடச் செல்வது உசிதம். பல கோவில்களில் சிவாச்சாரியாருக்குப் போதிய வருமானமில்லை. எனினும் அவர்கள் தம்பணியைச்சிறப்பாகச் செய்து வருகின்றனர். இவ்வாறு பக்தர்கள் தரிசனத்திற்கு வந்தால் அவர்களுக்கும் சிறிது உற்சாகம் அளிப்பதாக இருக்கும்.

நமது கோவில்கள் எல்லாம் சிறந்த கலைப் பொக்கிஷங்கள் வரலாற்றுச் சான்றுகள். உயர்ந்த கோபுரங்கள், பெரிய மதிற்சுவர்கள், அதிக அளவில் பிரகாரங்கள், கலை நுணுக்கம் மிகுந்த மண்டபங்கள்,

தூண்கள், சிற்பங்கள், வரலாற்றுச் சிறப்புடைய தெய்வங்கள், சிவனடியார் பாடிய பாடல்கள் என பல்வகைச் சிறப்புகள் உடையவை. ஆகையால் வழிபாட்டுக்குச் செல்லும்போது அக்கோவில்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொண்டு வழிபட்டால் நன்கு வழிபடலாம்.

நூலில் மாதிரிப் பயண அட்டவணை ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. தங்கள் வசதிக்கேற்ப அதை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ளலாம்.

ஏழு விடங்கத் தலங்களையும், அவற்றிற்கருகிலுள்ள தலங்களையும் தரிசித்து அன்பர்கள் இறையருள் பெற ஆண்டவனை வேண்டி விடை பெறுகிறேன்.

ஸப்த ஸ்தானத் தலங்கள்

திருவையாறு

திருப்பழனம்

திருச்சோற்றுத்துறை

திருவேதிகுடி

திருக்கண்டியூர்

திருப்பூந்துருத்தி

திருநெய்த்தானம்

ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் கோவில் திருவாவடுதுறை

கும்பகோணத்திற்கும், மயிலாடுதுறைக்கும் இடையில் திருவாலங்காட்டிலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது. சப்த விடங்கத் தலங்கள் தவிர ஸ்ரீ தியாகேசர், ஸ்படிகலிங்கம் உள்ளதலம். உமாதேவி பசு உருவில் வழிபட்டது.

இறைவன் : ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர்

இறைவி : ஸ்ரீ அதுல்ய குஜாம்பிகை

அம்பிகையை வேண்டினால் பல நாள் தடைபட்ட திருமணங்கள் நடக்கும் என்று சிவாச்சாரியார் கூறுகிறார்.

ஸ்ரீ தியாகேசர்; ஸ்வர்ணத்தியாகர், புத்திரத்தியாகர் என்றும் பெயருண்டு. இவர் ஆசனம் – வீரசிங்காசனம்; இவர் ஆடிய நடனம் – சுந்தர நடனம். முசுகுந்தச் சக்ரவர்த்தி புத்திரப்பேறு வேண்டி வந்த சமயம் திருவாரூர் தியாகேசராகக் காட்சி கொடுத்தார். திருவாரூரில் தியாகேசருக்குள்ள சிறப்புகள் இவருக்கும் உள்ளன. ஆறு வேளையும் பூஜைகள் உண்டு.

திருமூலர் திருமந்திரத்தை வெளிப்படுத்தியதலம். திருமூலருக்குத் தனிக்கோவிலும், பெரிய நந்தியும் உள்ளன.

பலன் தரும் பக்தி நூல்கள்

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்		
திருமுறைத் தொண்டர்	- நா. இராமமூர்த்தி	33.00
பயன் தரும் பதிகங்கள்	- அ. முத்துக்குமரசாமி	18.00
ஸ்ரீ துர்க்கை துதி அமுதம்	- T.M. பூதலிங்கம்	10.00
ஸ்ரீ துர்க்கை; ஸ்ரீ அம்பாள் ஸ்தோத்திரங்கள்	- குருஜி	16.00
அம்மன் துதி அமுதம்	- புலவர். ச. சுப்பிரமணியம்	20.00
பிரதோஷ மகிமை	- சிங்காரச் செல்வர் நாகை சி. அருண்குமார்	15.00
பிரதோஷ வழிபாடு	- உ. நரசிம்மன்	13.00
பிரதோஷ விளக்கம்	- அருள் நெறிச்செம்மல் அ. முத்துக்குமரசாமி	6.00
கும்பாபிடேக தத்துவம்		6.00
கிரக தோஷ நிவர்த்திப் பாமாலை (பொழிப்புரையுடன்)	- சோ. பாலசுப்பிரமணியன்	15.00
நலம் தரும் நவக்கிரக வழிபாடு	- வீ.சி. கிருபானந்தம்	30.00
நவக்கிரக வழிபாடும் தோஷ பரிகாரங்களும்	- ஆழி. வே. ராமசாமி	45.00
நவக்கிரக திருத்தலங்கள் - 40		45.00
சப்த விடங்கத் தலங்கள்		20.00
எளிய பூஜா முறை	- பண்டிட் T.S. கோதண்டராமன் (ஆகம பயிற்சி வகுப்பு முதல்வர்)	18.00
தமிழ் அர்ச்சனைகள்		13.00
சிவாலய வழிபாட்டுத் துதி மலர்		18.00
மகாகவி பாரதியாரின் பகவத் கீதை		30.00
கந்தர் சஷ்டி கவசம்	(பாக்கெட் சைஸ்)	2.00
சிவபுராணம் + அபிராமி அந்தாதி	(பாக்கெட் சைஸ்)	5.00
திருவிளக்கு பூஜை	(வார கோலங்களுடன்)	10.00
தெரிந்து கொள்வோம் (இந்து சமயத் துணுக்குகள்)	- சமயப் பரப்புனர் T.M. பூதலிங்கம்	45.00
அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீக முத்துக்கள்	- சிங்காரச் செல்வர் நாகை சி. அருண்குமார்	27.00
வாரியார் சொற்பொழிவில் சொன்னவை		25.00

விதுர நீதி	- உ. நரசிம்மன்	18.00
இந்து சமய சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்		24.00
இந்து மத சடங்குகளும் தத்துவங்களும்	- T.K. நாராயணன்	18.00
ஸ்ரீ காயத்ரீ (அனைத்து கடவுள்களுக்கும்)	- உ. நரசிம்மன் தேப்பெருமாள் நல்லூர்	18.00
பைரவர் பெருமை	- உ. நரசிம்மன் தேப்பெருமாள் நல்லூர்	15.00
தஞ்சாவூரும் அதைச் சுற்றியுள்ள கோயில்களும்		30.00
கும்பகோணத்தைச் சுற்றியுள்ள 70 திருக்கோயில்கள்		33.00
சிதம்பரம் முதல் தஞ்சாவூர் வரை தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள்	- Dr. K. சுப்ரமணியம்	45.00
அனந்தமங்கலம் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்தல வரலாறும் பாராயணத்துக்குரிய அனுமன் பாடல்களும்		10.00
திருமாலின் 108 திவ்விய தேசங்கள்		30.00
பிள்ளையார் கதை + விநாயகர் அகவல்		7.00
கடன் தொல்லை நீங்கும் செவ்வாய் வழிபாடு முறை (நவநாயகர்களின் ஸ்தோத்திரங்களுடன்)	- புண்டிட் T.S. கோதண்டராமன்	8.00
திருமணம் கைகூடும் திருமணஞ்சேரி	- சிங்காரச் செல்வர் நாகை சி. அருண்குமார்	20.00
இந்து மதம் வழிகாட்டுகிறது		28.00
மனச் சாந்திக்கு தியானம்	- ஆத்மஞானி K. வெங்கட்ராவ்	25.00
பயனுள்ள பொன்மொழிகளும், பழமொழிகளும்	- ரவிஜி	15.00
மனையடி சாஸ்திரம்	- A.M. பிள்ளை	25.00
ஏழிளந் தமிழ் (ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி நன்னெறி உலக நீதி)		11.00
உங்கள் ராசிக்கான அதிர்ஷ்ட எண்கள் கற்கள் நிறங்கள்		20.00
பிறந்த தேதியும், உங்கள் அதிர்ஷ்டமும்	- பாலாஜி	18.00
திருமணப் பொருத்தம் பார்ப்பது எப்படி?	- ஹயக்ரீவர்	11.00
மின்னல் வேக திருமணப் பொருத்தம் பார்ப்பது எப்படி?	- வீ.சி. கிருபானந்தம்	12.00
சாமுத்திரிகா லட்சண சாஸ்திரம் (மச்சங்களும் பலன்களும்)		20.00
தெரிந்து கொள்ள வேண்டிய தெய்வீக மூலிகைகள்		18.00
குடும்ப மருத்துவம்		18.00



டாக்டர். **K. சுப்ரமணியம்,**
GCIM, M.B.B.S., DTCD., FRSH., FICA., FCCP.,

இணை இயக்குனர்,
நெஞ்சக நோய் மருத்துவம் (ஓய்வு)

36, அஸ்தினாபுரம் மெயின் ரோடு,
நேரு நகர், குரோம்பேட்டை,
சென்னை - 600 044.
போன் : 2402845

தஞ்சை மாவட்டத்தில் பிறந்து சென்னையில் மருத்துவக் கல்வி பயின்று தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் சென்னை பொது மருத்துவமனை வரை, மருத்துவ அலுவலர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவமனைக் கண்காணிப்பாளர், மாவட்ட மருத்துவ அலுவலர் இணை இயக்குனர் போன்ற பல பதவிகள் வகித்து 1994-ல் ஓய்வு பெற்றார்.

தற்போது ஆன்மீகம் சம்பந்தமான புத்தகங்களும், பத்திரிகைகளுக்கு கட்டுரையும் எழுதி வருகிறார். இவர் எழுதிய முதல் நூல் "சிதம்பரம் முதல் தஞ்சாவூர் வரை - தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள்". குரோம்பேட்டை குமரன் குன்றம் - மத்ய ஸ்வாமிமலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஸ்வாமி கோவில் சத்சங்கத்தின் செயலராகவும், முதியோர் நலச்சங்கத்தின் செயலராகவும் பணியாற்றி வருகிறார்.